நான்காம் தமிழ்ச்சங்கம் - மதுரை, தோற்றம் 14.09.1901

செந்தமிழ்

திங்கள் இதழ்

தொகுதி: 110 பகுதி: 03 மார்ச்-2016

திருவள்ளுவர் ஆண்டு 2047

விலை: ரூ.10

வள்ளல் பாண்டித்துரைத் தேவர்

1867-1911

மன்னர் பாஸ்கர சேதுபதி

1868-1903

நான்காம் தமிழ்ச்சங்க வெளியீடு

தமிழ்ச்சங்க ஆட்சிக்குழு

மாட்சிமை தங்கிய மன்னர் நா.குமரன்சேதுபதி M.B.A.,	தலைவர்
மருத்துவர் ந.சேதுராமன் M.S., M.Ch. (Uro), MNAMS. (Uro), FICS	துணைத் தலைவர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,	செயலாளர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,	உறுப்பினர்
திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்	உறுப்பினர்
திரு. மருத்துவர் மு.அம்மமுத்துப்பிள்ளை	உறுப்பினர்
திரு. ச.பரங்குன்றம்	உறுப்பினர்
திரு. க.சி.அகமுடைநம்பி B.E.,	உறுப்பினர்
திரு. இரா.சன்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)	உறுப்பினர்
திரு. கே.ஆர்.என். கருணாகரன் M.B.A., M.L.,	உறுப்பினர்
திரு. அழ.சித்தையா	உறுப்பினர்
திரு. பெ.சந்திரசேகரன்	உறுப்பினர்

செந்தமிழ்க் கல்லூரிக்குழு

திரு. எம்.பி.ஆர். மலையாண்டி (எ) அசோக்		தலைவர்
திருமதி.இராணி ந.இலட்சுமி குமரன்சேதுபதி M.Sc., M.Phil.,		செயலாளர்
திரு. ச.மாரியப்ப முரளி M.A.,B.L.,		உறுப்பினர்
திரு. இரா.சண்முகசுந்தரம் I.R.S., (ஓய்வு)		உறுப்பினர்
திரு. ச.தசரதராமன் B.A.,B.L.,		உறுப்பினர்
திரு. து.மாயராசன் B.Sc., B.L.,		உறுப்பினர்
திரு. இரா.ஜெகனாதன் B.E.,		உறுப்பினர்
திரு. லெ.சிவக்குமார் B.E.,		உறுப்பினர்
திரு. ஜெ.பாலதண்டாயுதம் B.Sc.,		உறுப்பினர்
திரு. கி.ராஜாராம் M.B.A.,		உறுப்பினர்
முனைவர் க.பாலகிருஷ்ணன்	பல்கலைக்கழக நியமன	உறுப்பினர்
முனைவர் சு.விஜயன்		உறுப்பினர்
முனைவர் கி.வேணுகா		உறுப்பினர்

பொருளடக்கம்

1. சிலப்பதிகாரத்தில் குடி — 6
மறைமலை இலக்குவனார்

2. மகாகவி பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை — 14
டாக்டர் வீ.காந்திமதி எம்.ஏ., பி.எச்.டி.,

3. சங்கப்புலவர் ஔவையின் கட்டுடைப்பு — 23
முனைவர் பு.இந்திராகாந்தி

4. பொய்யாமை — 26
இரா.இராகவையாங்கார்

5. நாவலர் இரா.நெடுஞ்செழியனின் திருக்குறள் (பகுத்தறிவு) உரைச்சிறப்பு — 32
முனைவர் செ.ரவிசங்கர்

6. தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள் — 39
முனைவர் பா.நேருஜி

7. சங்கச் செய்திகள் — 41

இதழ் மணம்

நாடு என்ற அமைப்பும் அதன் அரசியல் தலைமை ஏற்கின்ற அரசன் என்னும் கோட்பாடும் உருவமைக்கப்பட்ட காலத்தில் 'குடும்பம் என்பது அடிப்படை அலகு' எனக் கருதப்பட்டது. வாழையடி வாழையாக வருகின்ற முறை வழுவாத ஒழுக்கம் பிழைபடாது வருகின்ற இனமரபு காத்தல் குடி ஓம்பல் என்ற சிறப்பினைப் பெற்றது. மானிடத்தின் மாட்சிமையை "ஒழுக்கம் உடைமை குடிமை" எனத் திருவள்ளுவர் போற்றுகின்றார். அத்தகை இனக்குழுவை குலம் பற்றி வாழ்தும் என்பார் சலம் பற்றிச் சால்பில செய்யார் எனப்போற்றுகின்றார்.

குடி, குடும்பம், குலம் என்பன நீண்ட வரலாறுடைய சொல்லாட்சியாகும். சிலப்பதிகாரத்தில் குடி என்னும் சொல், "பதியெழுவறியாப் பழங்குடி" எனப் பேசுவது செல்வச் செழிப்புடைய நீண்ட பாரம் பரியமுடைய புகார் நகரத்து வாழ்வை எடுத்துவைக்கிறது. சிலப்பதிகார ஆசிரியர் காலத்தில் அந்தணர்குடியும் அரசர் குடியும், வணிகக்குடியும் உயர்நிலை உடைய குடிகளாகக் கருதப்படுவது சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை உணர்த்துகிறது.

ஆனால் சங்ககாலத்தில்

"குறுங் கூரைக் குடி நாப்பண்" பட்டினப்பாலை-81

"கொழும் பல்குடிச் செழும்பாக்கத்து
அம்குடிச் சீறூர்" (அகம்)

"நட்டார் குடி உயர்க்குவை" - மதுரைக்காஞ்சி 113

"குடி நிரல் உடைமையும்"

போன்ற தொடர்கள் தமிழ்ச் சமூகத்தின் பொதுமையை உணர்த்துகின்றன. ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தின் இயற்கைப் பின்னணியில் நிகழும் இயல்பான ஆடம்பரம் அற்ற மக்கட் சமுதாயத்தின் சமநிலையையும் அதன் வழிப்பட்ட குடிமக்கள் வாழ்க்கையும் காட்டுகின்றன.

அதன்பின்பு நால்வகை வருணம் என்று சொல்லப்படுகின்ற "வேற்றுமை தெரிந்த நாற்பால்" தோற்றமும் அதன் விளைவுகளும் பின் நிகழ்ந்தவை; அவை இந்திய சமூகத்தை இன்று வரை பாதித்து வருவதை வரலாற்று நோக்கில் பார்க்க முடிகிறது.

பேராசிரியர் இ.மறைமலை தமிழ் உலகம் நன்கறிந்த பெரும் பேராசிரியர். அவர்கள் "சிலப்பதிகாரத்தில் குடி" என்னும் தலைப்பில் விரிவாக ஆய்வு மேற்கொண்டுள்ள கட்டுரை இடம்பெறுகிறது. மாணவர்கள் ஆசிரியர்கள் கற்றுப் பயன் பெறுக.

பேராசிரியர் வீ.காந்திமதி எழுதிய "மகாகவி பாரதியாரின் விநாயகர் நான்மணி மாலை" கட்டுரை இடம்பெறுகிறது. பாரதியாரின் கவிச்சுவையும் கருத்து ஆழமும் கட்டுரையில் பேராசிரியர் விரிவாக எழுதி இருப்பது கற்பவர்க்கு இன்பம் பயப்பதாகும். வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல் என நான்கு கவிதை மணிகளை கோர்த்து நாற்பது பாடல்கள் பாடியுள்ளார். நாற்பது பாடல்களும் பாடிப்பாடி பயன்பெறவும் இன்புறவும் சுவைபட எழுதப்பட்டுள்ளன.

"அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்தல் இயல்பு"

எனத் தவத்திற்கு பாரதி தரும் விளக்கம் விநாயகர் நான்மணி மாலையில் காணலாம். நாற்பது கவிதை வரிகளும் புரிந்து இன்புறத் தக்கன. எத்தனை முறை படித்தாலும் சுவை புதிது; பேராசிரியர் காந்திமதி பாரதியின் சொற்சுவையையும் பொருட் சுவையையும் கட்டுரையில் வரைந்துள்ள விதம் ஓவியன் தீட்டிய சித்திரம் போல உள்ளது.

முனைவர் செ.ரவிசங்கர் எழுதிய நெடுஞ்செழியனின் திருக்குறள் உரை குறித்த திறனாய்வுக் கட்டுரை இடம்பெறுகிறது. நாவலர் நெடுஞ்செழியன் நாவன்மையும் சான்றாண்மையும் மிக்க அரசியல் தலைவராக ஒரு தலைமுறைக் காலம் தமிழகத்தில் அரசியல், தமிழ் ஆகிய இரண்டு தளங்களிலும் சிறப்பான பணியாற்றிய பெரியார். அவர் திருக்குறளையும் பாரதிதாசன் கவிதைகளையும் மேடைதோறும் பாடி மக்களிடத்திலே தமிழ் உணர்வை தோற்றுவித்தவர். அவருடைய எழுத்துப் பணி குறித்து முனைவர் ரவிசங்கர் எழுதிய கட்டுரை இவ்விதழில் வருகிறது.

தஞ்சாவூர் குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கல்லூரிப் பேராசிரியர் பு.இந்திரா காந்தி எழுதிய சங்கப் புலவர் ஔவையின் கட்டுடைப்பு என்றும் கட்டுரை இடம்பெறுகிறது. "மகளிர் மடல் ஏறுதல் இல்லை" என்னும் தொல்காப்பியர் கூற்றை சங்கப்பனுவல் மாறுபட்டு நின்று கட்டுடைப்புச் செய்கிறது என்னும் செய்தியை திறனாய்வு செய்திருக்கிறார்.

இரா.இராகவையங்கார் எழுதியுள்ள "பொய்யாமை" என்னும் கட்டுரை இலக்கிய வளம் தோய்ந்தது. தமிழ் இலக்கியம் மற்றும் மெய்ப் பொருள் அனுபவம் மிக்க அப்பெரியார் "சத்தியம், வாய்மை என்பன பரம்பொருளையே குறித்தன" என்று குறிப்பிடும் தொடர் நீளநினைந்து அழ்மனத்தில் வைத்துப்போற்றும் தெய்வ வழிபாடாகும். அதுவே தியானம்.

சிலப்பதிகாரத்தில் குடி

மறைமலை இலக்குவனார்

மேனாள் சிறப்பு வருகைப் பேராசிரியர்,
கலிபோர்னியாப் பல்கலைக்கழகம்,
பெர்க்கிளி, அமெரிக்கா.
மேனாள் தமிழ்ப் பேராசிரியர், மாநிலக்கல்லூரி,
சென்னை.
நிறுவுநர்: திருக்குறள் விக்கி:தமிழ்க்கவிதை விக்கி

உலகின் பல்வேறு மொழிகளில் படைக்கப்பட்ட ஆதிகாவியங்கள் ஆண்டவனையும் தேவதைகளையும் அரசர்களையும் முதன்மைக் கதை மாந்தராகக் கொண்டு அமைக்கப்பெற்றவை. ஆயின் நம் தமிழ்மொழியில் கிடைக்கப்பெற்றவற்றுள் தொன்மையான சிலப்பதிகாரம் குடிமக்களைக் கதைமாந்தராகக் கொண்டு அமைக்கப்பெற்ற சிறப்பினையுடைது.

"முடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகப் பிறநாடுகளில் எல்லாம் அமைந்து விளங்க, குடிமக்கள் வரலாறே ஆதிகாப்பியமாகத் தமிழ்நாட்டில் அமைந்து விளங்குகிறது. குடியரசு உலகிலும் இந்தக் காப்பியத்தைப் பாராட்ட இடமுண்டு. பாட்டாளியுலகமும் இதனைப் பரிவுடன் வரவேற்கும். ஆய்ச்சியர் குரவை, குன்றக்குரவை, வேட்டுவ வரி என்று பாட்டாளிகளைப் பாடுவதில் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகளுக்கு எவ்வளவு மகிழ்ச்சி!" என்று அறிஞர் தெ.பொ.மீ. அவர்கள் கூறுவது இங்குக் கருதத்தக்கது. (குடிமக்கள் காப்பியம், பக்.4,2010)

அறிஞர்களின் ஆய்வுக்கும் மாணவர்களின் தேடலுக்கும் உரிய செய்தி ஒன்று இங்குக் குறிப்பிடத்தக்கது. குடிமகன், குடி என்னும் சொல் இன்றைய பொருளில்தான் பண்டைத்தமிழகத்தில் வழங்கியதா? ஒரு முடியாட்சிக் காலத்தில், மக்களாட்சிக் கோட்பாடுகள் மலராக் காலத்தில் வழங்கப்பட்ட 'குடி' என்னும் சொல் எதனைக் குறித்திருக்கும்? என்னும் வினாக்களுக்கு விடைதேட வேண்டியுள்ளது.

அடியார்க்கு நல்லார், நாட்டார், ஔவை, தமிழ்ஒளி, தெ.பொ.மீ. மு.வ., ம.ரா.போ.குருசாமி, முதலிய அறிஞர்கள் இவ்வினாக்களுக்கு விடை வழங்கவில்லை. குடி, குலம் இரண்டனுக்குமான வேறுபாடு யாது? சாதி என்னும் சொல்லும் பிற்காலத்தில் இடைச்செருகலாக நுழைந்த தெங்ஙனம்?

ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனின் புறநானூற்றுப் பாடலில் (புறம்-183) "எக்குடிப் பிறப்பினும் யாவரேயாயினும்" எனக் 'குடி' எனும் சொல்லாட்சியும் 'வேற்றுமை தெரிந்த நாற்பால்' எனப் 'பால்' எனும் சொல்லாட்சியும் இடம்பெறுவதைக் காணும்போது இவ்விரண்டனுக்கும் வேறுபாடு உள்ளமை புலனாகின்றது. கழாத்தலையாரின் புறநானூற்றுப் பாடலில் (புறம்:289) 'பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய மூதிலாளர்" என்று குறிப்பிடப்படும் 'குடி' என்ன பொருளில் வழங்குகிறது? நற்றிணைப் பாடலில் (நற்:110) "கொண்ட கொழுநன் குடி வறன் உற்றென, கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்" என்னும் அடிகளில் கூறப்படும் 'குடி' யாது? வள்ளுவப் பெருந்தகை 'குடிமை', 'குடிசெயல்வகை' எனும் அதிகாரங்களுள் சுட்டும் 'குடி' யாது? மேற்கூறப்பெற்ற பாக்கள் குறிப்பிடும் 'குடி' இன்றைய 'குடிமகன்' என்னும் சொல்லுடன் எவ்வகையில் உறவுடையது?

சங்க இலக்கியம் முழுமையும் ஆழ்ந்து ஆய்ந்து அதன் பின்னரே இவ்வினாக்களுக்குப் பொருத்தமான விடையளிக்க முடியும். இன்றைய நமது சமூகவியல் கோட்பாடுகளை முழுமையுமாகப் பின்பற்றி அன்றைய இலக்கியத்தோடு பொருத்தி விரைந்து ஒரு முடிவுக்கு வந்து விடுதல் முறையன்று.

'குடி, குலம்' என்பவற்றிற்கான சங்ககாலப் பொருளைத் தெளிவுறுத்தாமல் பேராசிரியர் மாதையன் கூறும் முடிவு மேலும் குழப்பத்தை விளைவிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. (சங்க இலக்கியத்தில் குடும்பம்,2010, ப.105).

குடி என்னும் சொல்,

"நட்டார் குடி உயர்க்குவை" - மதுரைக்காஞ்சி - 113.

கடவுட் கற்பொடு குடிக்கு விளக்காகிய
புதல்வன்" *(அகநானூறு, 184-2)*

"மன்பதை காக்கும் நீள்குடி" *(புறம் 71-17)*

"குடிநிரல் உடைமையும்" *(குறிஞ்சிப்பாட்டு - 30)*

எனக்குலம் என்னும் பொருளிலும்

"கொடுமுடி வலைஞர் குடிவயின் சேப்பின்"
- (பெரும்பாணாற்றுப்படை - 274)

"அம் குடிச் சீறூர்" *(அகம் 9:10)*

"குறுங்கூரைக் குடி நாப்பண்" *(பட்டினப்பாலை-81)*

"கெடுகுடி பயிற்றிய கொற்றவேந்தே" *(பதிற்றுப்பத்து-69;10)*

"குடிபுறந்தருநர் பாரம் ஓம்பி" *(பதிற்றுப்பத்து-13;24)*

"கொழும்பல்குடிச் செழும்பாக்கத்து" *(பட்டினப்பாலை-27)*

"கொழுங்குடி போகிய பெரும்பாழ் மன்றத்து" *(அகநானூறு, 377;6)*

எனக் குடிமக்கள் என்னும் பொருளிலும்

"குடிநன்கு உடைமையும்" *(அகநானூறு-352;8)*

எனக் குடிப்பிறப்பு என்னும் பொருளிலும்

"குடியும் மன்னும் தானே" *(புறநானூறு-314;15)*

எனக் குடிமகன் என்னும் பொருளிலும் ஆட்சிபெற்றுள்ளது என்னும் மாதையனின் விளக்கம் குழப்பத்திற்கே வழிவகுக்கிறது. இச் சொற்களின் பொருள் அறுதியிட்டு வரையறுக்கப்படாமல் மீண்டும் பயன்படுத்தப்படுவதே இக்குழப்பத்திற்குக் காரணம். குடி என்பதனை நாடு எனவும் (திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பக்.264) 'குடிசெயல்வகை' என்பதனை 'நாடு செயல்வகை' எனவும் மு.வ.விளக்குவது அவரது தனித்தன்மையைக் காட்டுகிறது.

இதுவரை நாம் கண்ட விளக்கங்களின் அடிப்படையில் சிலப்பதி காரத்தில் குடி என்னும் சொல்லாட்சியைப் புரிந்துகொள்வதைக் காட்டிலும் காப்பியக் கதைப்போக்கிற்கும் சூழலுக்கும் ஏற்பத் தெளிவு காண்பதே பொருத்தமாக இருக்கும்.

சிலப்பதிகாரத்தில் குடி, குலம் என வருமிடங்களைச் சற்று நோக்கினால் அன்றைய சமூகச் சூழலில் குடிபெறும் பொருள் விளங்கும்.

பதிஎழு அறியாப் பழங்குடி கெழீஇய - 15

(மங்கல வாழ்த்துப்பாடல்)

பெருநிலம் முழுதாளும் பெருமகன் தலைவைத்த
ஒருதனிக் குடிகளொடு உயர்ந்தோங்கு செல்வத்தான்
வருநிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்து வான்என்பான் 31-33

(மங்கல வாழ்த்துப்பாடல்)

குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்
அத்தகு திருவின் அருந்தவம் முடித்தோர் 8-9

(மனையறம்படுத்த காதை)

பெருங்குடி வாணிகன் பெருமட மகளே. - 76

(மனையறம்படுத்த காதை)

அரைசுகெடுத்து அலம்வரும் அல்லற் காலை,
கறைகெழு குடிகள் கைதலை வைப்ப
அறைபோகு குடிகளொடு ஒருதிறம் பற்றி 11-13
(அந்திமாலைச் சிறப்புசெய் காதை)

பீடிகைத் தெருவும், பெருங்குடி வாணிகர்
மாட மறுகும், மறையோர் இருக்கையும் 41-42
(இந்திர விழவு ஊர் எடுத்த காதை)

விழ்குடி உழவரொடு விளங்கிய கொள்கை - 43-5.
(இந்திய விழவு ஊர் எடுத்த காதை)

குலம்தரு வான்பொருள் குன்றம் தொலைந்த - 70
(கனாத்திறம் உரைத்த காதை)

உருவும் குலனும் உயர்பேர் ஒழுக்கமும்
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்
உடையீர் என்னோ உறுக ணாளரின் 46-48 (நாடுகண் காதை)

ஒடியான இன்பத்த அவர் உறை நாட்டுக்
குடியும் கூழின் பெருக்கமும் அவர்தம்
தெய்வக் காவிரித் தீதுதீர் சிறப்பும் 6-8 (கட்டுரை)

இமிலே றெதிர்ந்த திழுக்கென அறியான்
தன்குலம் அறியுந் தகுதியன் றாதலின் 100-101
(கொலைக்களக் காதை)

மன்பழி தூற்றுங் குடியதே மாமதுரைக் -28
ஊர்சூழ் வரி
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி 57-58
(வழக்குரை காதை)

அடிதொழு திறைஞ்சா மன்ன ரல்லது
குடிபழி தூற்றுங் கோலனு மல்லன் 33-34
(கட்டுரை காதை)

வியாத் திருவின் விழுக்குடிப் பிறந்த
தாய வேந்தர் தம்முள் பகையுற 143-144 (கட்டுரை காதை)

முடிகெழு வேந்தர் மூவருள்ளும்
படைவிளங்கு தடக்கைப் பாண்டியர் குலத்தோர் 1-2 (கட்டுரை)

சிறுகுடியீரே! சிறுகுடியீரே!
குன்றக் குரவை

குடி புரவுண்டு கொடுங்கோல் அஞ்சி,
மன்பதை காக்கும் நன் குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது, தொழுதகவு இல்' (காட்சிக் காதை)

முது நீர்க் காவிரி முன்துறைப் படுத்தல்,
மறத் தகை நெடுவாள் எம்குடிப் பிறந்தோர்க்கு,
சிறப்பொடு வருஉம் செய்கையோ அன்று; (காட்சிக் காதை)

முது குடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக்கு அளித்த மகட்பால் காஞ்சியும், (காட்சிக் காதை)

பகை அரசு நடுக்காது, பயம் கெழு வைப்பின்
குடி நடுக்குறூஉம் கோலேன் ஆக' (கால்கோள் காதை)

முடிபுறம் உரிஞ்சும் கழல்கால் குட்டுவன்
குடி புறந்தருங்கால் திரு முகம் (நடுகல் காதை)

காப்பியத் தொல்குடிக் கவின்பெற வளர்ந்து (வரந்தரு காதை)
ஓடியா இன்பத்து அவன் உறை நாட்டுக்
குடியின் செல்வமும், கூழின் பெருக்கமும் (வரந்தரு காதை)

ஏற்றத் தாழ்வுற அமைந்த சமுதாய அமைப்பில் உயர்நிலை மிக்க அந்தணர் குடியும், அரசர் குடியும், வணிகக் குடியும் தொல்குடி, முதுகுடி,

விழுக்குடி, நன்குடி, பெருங்குடி எனப் போற்றப்பட்டுள்ளமையைச் சிலம்பு தெளிவுறுத்துகிறது.

அரசருக்கு முறையாக வரி செலுத்துதல் குடிகளின் கடமை என்பதையும் அங்ஙனம் செலுத்தாது அரசனின் வீழ்ச்சியை எதிர்நோக்கும் குடிகள் கடமையிற் பிறழ்ந்த குற்றம்சார் குடிகள் எனவும் இளங்கோவடிகள் சுட்டுகிறார்.

அரைசுகெடுத்து அலம்வரும் அல்லற் காலை,

கறைகெழு குடிகள் கைதலை வைப்ப

அறைபோகு குடிகளொடு ஒருதிறம் பற்றி 11-13

(அந்திமாலைச் சிறப்புசெய் காதை)

என்னும் அடிகளுக்கு நாட்டார் வகுக்கும் உரை இக்கருத்தை நன்கு விளக்கும் வண்ணம் அமைந்துள்ளது.

"கறைகெழு குடிகள் கைதலை வைப்ப - இறை செலுத்துதற்குப் பொருந்தியுள்ள குடிகள் துயரமுற, அறைபோகு குடிகளொடு ஒரு திறம் பற்றி - அங்ஙனம் இறை செலுத்தாது கீழறுத்தல் செய்யும் குடிகளை ஒரு தலையாகப் பற்றி, வலம்படு தானை மன்னர் இல்வழி - வெற்றி பொருந்திய சேனையையுடைய வேந்தர் இல்லாத இடமறிந்து, புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின் - அவர் நிலமெல்லாம் கெடும்படி புதிதாக வந்து தங்கிய குறுநில மன்னர்போல"

கறை - கடமை; வரி.

துயருற என்பதனைக் கைதலை வைப்ப என்பதனாற் குறிப்பிட்டார் விருந்தின் மன்னர் குடிகொன்றிறை கொள்வராகலின் வரி செலுத்துங் குடிகள் துயருறுவாரென்க. அறை போதல் - கீழறுத்தல்; உட்பகையாய்ப் பகைவர்க்கு உதவி செய்தல். ஒடு - ஐ. இல்வழி - இல்லாதவிடம்; ஈண்டுக் காலத்தை உணர்த்தி நின்றது. குறுநில மன்னரை விருந்தின் மன்னர் என்றமையால் தானை மன்னர் தொன்றுதொட்டு வருவோர் என்பதாயிற்று." என்னும் விளக்கம் மூவேந்தர் தொல்குடி என்றழைக்கப் பட்டதன் காரணத்தைத் தெளியச்செய்கிறது.

குடி என்பதற்கு இன்றைய கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு ஆய்ந்தால் மேலும் புதிய விளக்கம் ஒன்றனைப் பெறலாம். அரசு குடிகளுக்காக ஆற்றும் பணிகள் ஒரு வரையறைக்குட்பட்டனவே. திடுமென நேரிடும் நேர்ச்சிகளுக்கு அன்றைய மன்னராட்சியில் மட்டுமின்றி இன்றைய மக்களாட்சியில்கூட உடனடித்தீர்வுகளை

எதிர்நோக்க இயலாது. அத்தகைய நேர்ச்சிகளையும் அதற்கானத் தீர்வுகள் ஒரு குடிமகனால் வழங்கப்படுதலையும் சிலப்பதிகாரம் செப்புகிறது.

மாடமறுகில் ஓடிவரும் மதயானையிலிருந்து ஒரு முதியவரைக் காத்தல், நெறியில் நீங்கியோன் தண்டனைக்குட்படும்போது தங்கள் வாழ்க்கைத் தேவைகளுக்காக அவன் ஆதரவை நம்பிவாழும் அவனைப் பெற்ற தாயையும் சுற்றத்தாரையும் வறுமை நேராது காத்தல், ஆகிய செயல்களைக் கோவலன் ஆற்றியமை இங்குக் குறிப்பிடத்தக்கவை. மேலும்,

"பிள்ளை நகுலம் பெரும்பிறி தாக
எள்ளிய மனையோள் இனைந்துபின் செல்ல

. . . .

ஒல்காச் செல்வத் துறுபொருள் கொடுத்து
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ" (அடைக்கலக் காதை 54-75)

என்னும் மாடலமறையோனின் கூற்று சிறுபான்மையினருக்கு உதவும் பணியிலும் கோவலன் கொண்டிருந்த ஈடுபாட்டைச் சுட்டுகிறது.

கோவலனின் பன்மொழிப்புலமை மனிதநேயத்துடன் உதவுதற்குப் பயன்பட்டதை மட்டுமின்றி இத்தகைய குடிமக்கள் நிறைந்திருத்தல் அரசனின் செங்கோலாட்சி மேலும் சிறந்தோங்க வழிவகுத்ததையும் கூறுகிறது. இத்தகைய ஒப்புரவாளர்தாம் வள்ளுவரால் 'தக்கார்' எனக் குறிப்பிடப்பட்டிருப்பர் போலும்.

நேரடியாக அரசன் உடன்சென்று உறுதுயர் தீர்க்க இயலாச் சூழலில் இத்தகைய தக்கார் அரசனின் சார்பாக இப்பணிகளை ஆற்றுதல் நன்று என இளங்கோவடிகள் கருதியிருக்கவேண்டும். எனவே அதனைக் கோவலன் பண்புநலன் வாயிலாக விளக்குகிறார் எனலாம்.

பதியெழு அறியாப் பழங்குடி நிறைந்திருந்த பூம்புகார், 'நாடென்ப நாடா வளத்த' என்னும் குறளுக்கு எடுத்துக்காட்டாகச் சோழநாடு விளங்கியமையைக் கூறுகிறது. ஆனால் இத்தகைய பூம்புகாரிலிருந்து 'உலந்த பொருள்' ஈட்டுதற்குச் சோழநாட்டின் நீங்கிப் பாண்டிய நாட்டுக்குக் கோவலன் பயணமானான் என்னும் செய்தி சிலம்பில் அவலச் சுவையை மிகுவிக்கும் வண்ணம் அமைந்துள்ளது. தன் புறத்தொழுக்கத்தால் தனக்கும் தன் பெற்றோருக்கும் அவப்பெயர் ஏற்படச் செய்தது மட்டுமின்றித் தன் நாட்டுக்கும் அவப்பெயர் ஏற்படுமாறு கோவலன் இழுக்கினான் அன்றோ?

இங்ஙனம் சிலப்பதிகாரத்தில் குடி குறித்து ஏற்படும் செய்திகள் பலப்பல. ஒரு சில செய்திகள் மட்டுமே இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள இன்றைய சமூகவியல், அரசியல், குடிமையியல் வழங்கும் தரவுகளின் அடிப்படையில் ஆய்வு நிகழ்த்தினால் 'குடி' குறித்துச் சிலம்பு வழங்கும் கோட்பாடுகளும் இன்றைய சமூக அமைப்பில் அவற்றின் தாக்கங்களும் நாம் பின்பற்றக்கூடிய நெறிகளும் குறித்து மேலும் தெளிவு பெறலாம் என்பதில் ஐயமில்லை.

மகாகவி பாரதியாரின் விநாயகர் நான்மணிமாலை

- டாக்டர். வீ.காந்திமதி எம்.ஏ., பி.எச்.டி.,
பேராசிரியர் (ஓய்வு)
செந்தமிழ்க் கல்லூரி, மதுரை.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகின் தலைமகன் மகாகவி பாரதியார். இந்த எட்டையபுரத்தார் நாட்டை அடிமை செய்த எவரையும் சட்டை செய்யாதவர். அடிமைத்துயில் எனும் ஆழ்ந்த உறக்கத்தில் கிடந்த நம்நாட்டு மக்களைத் தன் பாட்டுத் திறத்தால் கட்டி எழுப்பியவர். நாட்டுப் பற்றையும் மொழிப்பற்றையும் ஊட்டியவர். நாடு வாழ நல்லவர் உள்ளமெல்லாம் நலிவின்றி வாழ நல்ல செஞ்சொற் கவிதைகளைச் சிந்தை இனிக்கத் தந்தவர். தங்கு தடையில்லா எளிய தமிழில், பாமர மக்களும் புரிந்துகொள்ளக் கூடிய மொழியில், அவர்கள் பயிலும் சொற்களைக் கொண்டே கவிகள் புனைந்த புதுமையாளர், தமிழ்க் கவிதை வரலாற்றிலே புதியதொரு சகாப்தத்தைத் தொடங்கி வைத்தவர். செம்பைக் கட்டித் தங்கமாகவும், கல்லை வயிரமாகவும் ஆக்கும் ரசவாதத்தை இவரது பாடல்களில் காணலாம்.

பாரதியார் தேசபக்தர் மட்டுமல்லர். சிறந்த தெய்வ பத்தரும் ஆவார். காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிப் பக்திப் பரவசத்தில் நாதன் நாமத்தை ஓதும் இறைபக்தர்களுள் இவரையும் ஒருவராகக் குறிப்பிடலாம். "தெய்வம் நமக்குத் துணை பாப்பா" என்று பால பருவத்திலேயே பகவானை அறியத் தூண்டியவரல்லவா? பாரதியின் உள்ளத்தில் தெய்வபக்தி சுடர்விட்டு எரிகின்ற தன்மைக்கு, அவர் படைத்த 'விநாயகர் நான்மணிமாலை' என்ற நூல் தக்கதொரு சான்றாகும்.

தமிழர் வரலாற்றில் விநாயகர் வழிபாடு குறித்த சான்றுகள் சங்க இலக்கியங்களில் சொல்லப்படவில்லை. பல்லவர் காலத்தில்தான் விநாயகரும் அவருக்கென்ற வழிபாடுகளும் புகுந்தன எனலாம். பிள்ளையார், பிற்காலத்தில் வந்த புதுத்தெய்வமாயினும் அவர் இந்து சமயத்தவர் அனைவருக்கும் பொதுத் தெய்வமாகி விட்டார். சந்திதோறும் பிள்ளையாரைச் சந்தித்து வழிபடுகிறோம் நாம். முச்சந்திப் பிள்ளையார் கோவில்கள் எத்தனை எத்தனை நம்நாட்டில் உள்ளன. சுருங்கக் கூறின்

அவர் 'மக்கள் தெய்வம்' என்ற அளவிற்கு நம்நாட்டில் செல்வாக்குப் பெற்றிருக்கிறார். எனவே மக்கள் கவியான பாரதியார், மக்கள் தெய்வமான விநாயகரின் மேல், 'விநாயகர் நான் மணிமாலை' என்ற நூலையே படைத்துவிட்டார். இவர், பராசக்தி மீது, தனிப்பாடல்கள் சில பாடியிருக்கிறாரே அன்றித் தனிநூல் படைத்ததில்லை. கண்ணன்பாட்டு கூட, தமிழ் ஐந்திணை இலக்கணப்படி அகத்துறை பற்றிப் பாடவேண்டுமென்ற ஆர்வத்தால் படைக்கப்பட்டதென்றே சொல்ல வேண்டும். எனவே பாரதியார் படைத்த பக்திநூல், 'விநாயகர் நான்மணிமாலை' ஒன்றுதான்.

'நான்மணிமாலை' என்பது - நான்குவகை யாப்புகளில் அமைந்த பாடல்களைக் கொண்டு திகழ்வது. அதாவது **வெண்பா, கலித்துறை, விருத்தம், அகவல்** ஆகிய நான்கு பா வடிவங்களில், ஒவ்வொரு பாவிலும் பத்துப் பத்துப் பாடல்களாக நாற்பது பாடல்களுடன் விளங்குவது. இந்நாற்பது பாடல்களும் அந்தாதியாக அமைந்திருக்கும். பட்டினத்தார் பாடிய 'கோயில் நான்மணிமாலை' என்னும் நூலே நான்மணி மாலைகளுள் முதலில் தோன்றியது. பட்டினத்தாரின் நூலுள், 'நாயகன் - நாயகி பாவமெனும் அகப்பொருள் பற்றிய பாடல்களும் பாடப்பட்டுள. ஆனால், பாரதியாரோ தம் நூலின் ஒவ்வொரு பாடலிலும் பக்திப் பரவசத்துடன் நின்று விநாயகரை வழிபடுகிறார்.

புதுவையிலே மணக்குள விநாயகர் கோயில் ஒன்றிருக்கிறது. அந்தக் கோயிலுக்குப் பாரதியார் அடிக்கடி சென்று, மணக்குள விநாயகரை மனங்கனிந்து பாடி வழிபடுவது வழக்கமாம். அந்த மணக்குள விநாயகரக்குத் தான் தாம் புனைந்த நான்மணிமாலையை அணிவித்துள்ளார். எனவே இந்நூல் 'விநாயகர் நான்மணிமாலை' என்ற பெயரைப் பெற்றுத் திகழ்கிறது. பிள்ளையார், ஏழையராலும் எளிதில் வழிபடக்கூடிய தெய்வமல்லவா? ஏழையர் தெய்வமாகப் பிள்ளையார் விளங்குவதாலே, பாரதியார் பிற எந்தக் கடவுளருக்கும் தராத பெருமையைப் பிள்ளையாருக்கே தந்து, தனியாகப் பக்திப்பனுவல் படைத்திருக்கிறார் போலும்.

பாரதியார் இந்த நூலை மவுனத்தைக் கடைப்பிடித்து எழுதியதாகத் தாமே கூறுகிறார். ஆம்! வாயே திறவாத மவுனத்தில் இருந்து, புறக்கண்களை மூடி அகக்கண்களைத் திறந்து, தமிழ்க்கவி செய்வேனென்று விரதம் பூண்டு, இந்நூலின் நாற்பது பாடல்களையும் தம் இதயத்தே எழுதிக்கொண்டு, பின்னர் ஏட்டில் எழுதியிருக்கிறார். மாசுகள் தூசுகள் என்னும் மாயையைச் சுட்டெரிக்கும் தீயை நிகர்த்த கவியைச் செய்வதற்காகப் பாரதி விநாயகரிடம் சரண் புகுகின்றார். இறைவன் முன்னிலையில் இதயத்தால் வழிபடும் இறைபக்தர்கள் தம்மை நாயினும்

கீழாக எண்ணிக்கொண்டு வேண்டி நிற்பர். 'நாணமும் அச்சமும் நாய்களுக்கு வேண்டுமாம்' என்று சொன்ன பாரதி, விநாயகரின் முன்நின்று, தன்னைப் பல பிழைகள் செய்த நாயேன் என்கிறார். இன்று களைத்து ஓய்ந்துவிட்டேன். உனது அருளைத் தவிர வேறு கதி இல்லை. எனவே உன்னை நாடிவந்தேன். நீயே சரணம்! உனது அருளே சரணம்! என்று தனது மவுன விரதத்தில் பூத்த நெருப்புமலர்க் கவிகளை, விநாயகருக்குக் காணிக்கையாக்கிய விதத்தை,

"நீயே சரணம் நினது அருளே சரணம் சரணம்
நாயேன் பலபிழை செய்து களைத்துனை நாடிவந்தேன்.
வாயே திறவாத மௌனத் திருந்துஉன் மலரடிக்குத்
தீயே நிகர்த்தொளி வீசும் தமிழ்க்கவி செய்குவனே" (பா.எ.2)

என்ற பாடலில் காணமுடிகின்றது.

பாரதியார், புராணக் கற்பனைகளை எதிர்த்துப் போராடியதில்லை. ஆனாலும் கலை உரைத்த கற்பனையே நிலை எனக் கொண்டாடும் கண்மூடி வழக்கத்தைக் கடைப்பிடித்தவருமல்லர். புராணக் கதைகளை மெய்யென்று நம்பி அவற்றிற்கு அடிமைப்பட்டவருமல்லர். இத்தகையவர், சந்திர மவுளித் தலைவனாம் சிவனின் மைந்தனை, சக்தியின் தலைப்பிள்ளையை எப்படியெல்லாம் எண்ணி எண்ணித் துதிக்கிறார் தெரியுமா? அந்த விநாயகரைத் தன் துணையாக - உயிராக - உயிர் மன்னவனாக - உயிரின் உள்ளிருந்து சுடர்விடும் மணியாக - தன் வாழ்விற்கோர் அணியாக - உள்ளத்தின் ஆரமுதமாக - அற்புதமாகக் காண்கிறார். கலை எழுகின்ற சுடரே! உன்னை என்ன சொல்லி வாழ்த்துவனேனென்று வணங்குகிறார்.

"துணையே, எனது உயிருள்ளே இருந்து சுடர்விடுக்கும்
மணியே, எனதுயிர் மன்னவனே, என்றன் வாழ்வினுக்கோர்
அணியே, எனுள்ளத்தில் ஆரமுதே, எனது அற்புதமே,
இணையேது உனக்குரைப்பேன் கடைவானில் எழுஞ்சுடரே"

என்றவாறு பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டப் பாடிப் பரவுகின்றார்.

பராசக்தியுடன் மிகுந்த ஈடுபாடு கொண்டவர் பாரதியார் என்பதை எவரும் மறுக்கவியலாது. இவர் சக்தியையே வழிபட்டு வணங்கியதால், 'பராசக்திக் கவிஞர்' என்ற பாராட்டையும் பெற்றவர், இந்த நூலிலும் கூட, 'புதுவை விநாயகனே! என் தொண்டுகள் யாவும் உன் அன்னை பராசக்திக்காகவே தொடரும், அதற்கு உன் அருள் எனக்கு வேண்டும்' என்றே வேண்டுகிறார். ஒரு பாடலில், 'சிவந்த நிறமேனியார் - இனிமை நிறைந்தவள் - ஸ்ரீதேவி - செந்தாமரை மலரில் சேர்ந்து இருப்பவள் ஆகிய பராசக்தி கையாளாக அதாவது வேலையாளாக, ஏவலாளியாக வந்து

நின்று, அவளது அடியேனாகிய நான் செய்கின்ற தொழில்கள் யாவையும் கைகொடுத்துக் காப்பாற்றுவாள். புகழுக்குரிய கலைவாணியும் என்னுள்ளத்தே வந்து கவிதைகளைப் பொழிவிப்பதற்கு அச்சக்தியே துணைபுரிவாள். இதற்கெல்லாம் சந்தியின் மைந்தனாகிய விநாயகரைப் பற்றிப் பேசினாலே போதுமாம்.

"செய்யாள் இனியாள் ஸ்ரீதேவி, செந்தாமரையிற் சேர்ந்திருப்பாள்
கையாளென நின்று அடியேன்செய் தொழில்கள்யாவும் கைகலந்து
செய்வாள்; புகழ்சேர் வானியும் என்னுள்ளே நின்று தீங்கவிதை
பெய்வாள்; சக்தி துணைபுரிவாள், பிள்ளாய் நின்னைப் பேசிடிலே"

ஏதோ சிலபல காரணங்களுக்காக நாமெல்லாம் கோவிலுக்குச் செல்கின்றோம். கடவுளிடம் என்னவெல்லாமோ நமக்கு வேண்டுமெனக் கேட்கின்றோம். பொன் வேண்டும், பொருள் வேண்டும், போகம் வேண்டும், சொத்து வேண்டும், சுகம் வேண்டும் என்றுதானே நமது சுயநல வேட்கையினை இறைவனிடம் வெளியிடுகின்றோம். ஆனால் பக்தி ஒன்றிலே இச்சை கொண்ட ஓர் அடியவர் இறைவனிடம், 'யாமிரப்பவை பொன்னுமல்ல ! பொருளுமல்ல ! போகமுமல்ல ! இறைவா ! உன் அருளும் அன்புமே எனக்கு வேண்டும்' என்கிறார். இங்கே நம் பாரதியாரும் விநாயகரிடம் வரங்களை வேண்டுகிறார். 'எவரும் பேசமுடியாத இறைப் பொருளைப் பேசநான் துணிந்தேன்; எவரும் கேட்காத வரத்தை நான் கேட்கத் துணிந்தேன்' என்கிறார். அவர் கேட்கின்ற வரங்கள் தான் என்ன?

மனித இனத்தை மட்டும் பாரதியார், சிந்தையிற் கொண்டிருக்கவில்லை. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன் என்று, ஆன்மநேய ஒருமைப்பாட்டுணர்ச்சியைப் பறைசாற்றிய அருட்ஜோதி இராமலிங்க வள்ளலாரைப் போலப் பாரதியாரின் உள்ளமும், எல்லா உயிரினங்களின் மேலும் அன்பு கொள்கிறது.

மண்மீது வாழுகின்ற மக்கள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள் மட்டுமன்றிப் புல்பூண்டு மரங்கள், இவை யாவும் துன்பமின்றி வாழ, விநாயகர் வகை செய்ய வேண்டுமென்பதே பாரதி கேட்கும் முதல் வரமாகும். பின்னர், தான் ஞானாகாசத்தின் நடுவே நின்று கொண்டு இப்பூமிதனில் அன்பும் பொறுமையும் நிலைத்து நிற்கவேண்டும். துன்பமும், வறுமையும் சாவும் நீங்கி எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும் என்று வரம் கேட்கிறார். இவ்வரங்களை எல்லாம் பாரதியார் கேட்டவுடனே, விநாயகரும் திருவுளமிரங்கி 'அங்ஙனமே ஆகுக!' என்று சொல்லிவிடுவாராம். பாரதியாருக்குத்தான் விநாயகரின்மேல் எத்தனை நம்பிக்கை? எனவே பாரதி, 'எனக்கிவ் வரங்களை - உடனே, இந்நாளிலே,

இப்பொழுதே வழங்குவாயாக' ஆதிமூலமே! அனந்த சக்தி குமரனே! சந்திர மௌளியே! நித்தியப் பொருளே! உனக்கு என் சரணம்! சரணம்! சரணம்! என்று சரணாகதி அடைகிறார்.

"பேசாப் பொருளைப் பேசநான் துணிந்தேன்
கேட்கா வரத்தைக் கேட்கநான் துணிந்தேன்" (பா.எண்.32)

என்று தொடங்கும் பாடல் பாரதியின் வரங்களை வரிசைப் படுத்துகின்றன.

இந்நாள், இப்பொழு தெனக்கிவ் வரத்தினை
அருள்வாய்; ஆதி மூலமே! அநந்த
சக்தி குமரனே! சந்திர மவுலீ!
நித்தியப் பொருளே சரணம்,
சரணம், சரணம், சரணமிங் குனக்கே" (பா.எண்.32)

ஓ! மனிதனே! உன் உயிர் உன் உடம்பின்பால் அன்பு செலுத்த வில்லை என்றால் உனக்கு மனிதன் என்ற பெயர் நிற்குமா? எலும்பு சேர்ந்த உடலுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள தொடர்பு - அன்பிற்கு எடுத்துக்காட்டு அல்லவா? இதைத்தானே திருவள்ளுவர் "அன்பின் வழியது உயிர்நிலை" என்றார். இந்த அன்பு நம்மிடம் இல்லை என்றால் நாம் வெற்றுச் சத்தமிடும் வெண்கலமாகவும், ஓசையிடும் கைத்தாளமுமாக ஆகிப்போவோமென விவிலியம் கூறுகிறது. "அன்பு ஒன்றுதான் நாம் செய்கின்ற தவமாம்' - இப்படிப் பாரதியார் சொல்லுகிறார். விரும்பியதெல்லாம் விரும்பியவாறு அடைவதற்குத் தவம் செய்ய வேண்டும். விருப்பம் என்பது எது? தொல்லையும் துயரமும் நோவும் நீங்கி இன்பமுடன் வாழ்வதைத்தானே மனிதன் விரும்புவான். மகிழ்ச்சிக்கு ஊற்று, இன்பத்திற்கு வேர் எதுவெனில் அன்பு ஒன்றுதான். பகைவரையும் மன்னித்து நேசிக்கவும், உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்ற பேதங்கள் மறைந்து எல்லோரையும் தம்மைப்போல் நினைப்பதற்கும் அன்பே காரணமாகும். அன்புடையோரால் மட்டுமே இன்பமாக வாழ்தல் இயலும் என்பது அன்பே தவம்! அன்பை விடச் சிறந்த தவமில்லை. 'நெஞ்சமே! நெஞ்சமே! நீ தவம்செய்! அன்பென்ற தவத்தைச் செய்!' என்று பாரதியார் தன் நெஞ்சிற்கு அறிவுறுத்தியதனை

"செய்கதவம்! செய்கதவம்! நெஞ்சே! தவம் செய்தால்
எய்த விரும்பியதை யெய்தலாம் - வையகத்தில்
அன்பிற் சிறந்த தவமில்லை; அன்புடையார்
இன்புற்று வாழ்த லியல்பு" (பா.எ.37)

என்னும் பாடல் இயம்புகிறது.

கவிதை பாடப்படவேண்டும். அதுதான் பாட்டு சாதாரண மனிதன்

உரைநடையைக் கொண்டு தமது கருத்தையும் உணர்வையும் புலப்படுத்துவது போலக் கவிஞன் செய்யுளைத் துணைக்கொண்டு பிறருடன் உரையாடுகிறான். பாரதியார் செய்த அதிமுக்கியமான புதுமைச் செயல் அவர் கவிதை மூலம் மக்களுடன் உரையாடியதே.

இந்தப் பழகுதமிழ்ப் பாவலர் சாமானியக் கவிஞர் அல்லர். சுவை புதிது, பொருள்புதிது, வளம் புதிது, சோதிமிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மகாகவிதையைச் செய்து தந்தவர். தமது பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட வைத்தவர். அவரே பாட்டினைப்போல் ஆச்சரியம் பாரின்மிசை இல்லையடா என்று சொல்லிக் கவிதை இன்பத்தில் கட்டுண்டு கிடந்தவர். எனவே தான் 'நமக்குத் தொழில் கவிதை' என்கிறார். அடுத்த தொழிலாக 'நாட்டுக்கு உழைத்தலை'க் குறிப்பிடுகிறார். 'அற்புதமான அமுத தாரைகளை எலும்புத் துளைதோறும் ஏற்றினான்' என்று இறைபக்தியைக் குறித்து மாணிக்க வாசகர் பாடினார். பாரதியாருக்குத் தேசபக்தி அவ்வாறே இருந்தது. தாழ்வுற்று, வறுமை மிஞ்சி விடுதலை தவறிக்கெட்டு பாழ்பட்டு நின்ற பாரத தேசத்தை வாழ்விக்க வண்ணக் கவிகள் தந்தவர் பாரதியார். அந்நியர் ஆட்சியின் அலங்கோலத்தைத் தம்பாடடில் வடித்துக் காட்டித் தனக்குத் தொழில் 'நாட்டுப்பணி-மக்கள்பணி' என்று ஆணித்தரமாகக் கூறி உலகறியப் பறை அறைகின்றார். இனி 'இமைப்பொழுதும் சோராதிருத்தலையே' தமது மூன்றாவது பணி என்கிறார். 'எழுமின் - விழிமின் - இலக்கை அடையும்வரை அயராது உழைமின்' என்று அறைகூவல் விடுத்துச் சென்றாரே சுவாமி விவேகானந்தர். அவரைப் போலவே மகாகவி பாரதியாரும், இமைப்பொழுதும் சோம்பியிராது, எப்பொழுதும் - எவ்விடத்தும் - எந்நேரத்தும் தான் உழைக்க வேண்டுமென விரும்புகிறார். ஓயாத உழைப்பே வாழ்வின் உயர்வுக்குரிய வழி என்பதை உறுதியுடன் எடுத்துரைக்கிறார். இத்தகைய மூன்று தொழில்களையும் தனக்கு வழங்க வேண்டுமென உமையின் இனிய மைந்தனிடம், பூத கணங்களின் நாதனிடம், எல்லோரையும் வாழ்விக்கும் விநாயகப் பெருமானிடம்,

"நமக்குத் தொழில்கவிதை நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதுஞ் சோரா திருத்தல்; - உமைக்கினிய
மைந்தன் கணநாதன் நங்குடியை வாழ்விப்பான்;
சிந்தையே யிம்மூன்றுஞ் செய்" *(பா.எ.25)*

இவ்வாறு வேண்டுகிறார்.

ஒரு பாடலில் இப்பூமிதனில் பிறந்த ஒவ்வொருவருக்கும் உரிய கடமைகளாக நான்கினைக் குறிப்பிடுகிறார். அதாவது, இன்ப துன்பங்

களுக்கு அப்பாற்பட்டதல்ல நமது வாழ்க்கை. நாம் இன்பத்தால் ஈர்க்கப் படுகிறோம். துன்பத்தால் துவள்கிறோம். இன்ப ஆரவாரத்திலும், துன்ப அழுகையிலும் தன்னைத்தான் ஆளுகின்ற தன்மையை நாம் பெற வேண்டும். கோபம், வெறுப்பு, ஆசை, அழுக்காறு, அச்சம், அழுகை போன்ற உணர்ச்சி அலைகளின் நடுவே, அவ் அலைகளால் தாக்கப்படாது, அசையாத நிறைகுடம்போல வாழ்தல் வேண்டும். இதுவே மகாகவி பாரதி நமக்கிட்ட முதற்கடமையாகிய 'தன்னைக் கட்டுதலாம்.' 'அடுத்த வீட்டில் அடுப்பெரியாதபோது உன்னால் மட்டும் உண்ணுவதற்கு முடியுமா? பசியாலும் பிணியாலும் மனித இனம் செத்துக் கொண்டிருக்க நீ வாழ்வதால் பயன் என்ன? பிறர் துயர் களைவதைக் கடமையாகப் போற்று. பிறரைக் கெடுத்து வாழாதே! பிறர் வாழ நீ வாழ்வாயாக!' என்று மனிதநேயமே மனிதனுக்கு வேண்டியது என்னும் பொருளில் 'பிறர் துயர் தீர்த்தலை'யும், 'பிறர் நலம் வேண்டுதலை'யும் அடுத்த இரு கடமைகளென எடுத்துரைக்கிறார்.

நான்காவது கடமை யாதெனில், உலகெலாம் காக்கின்ற விநாயகனைப் போற்றுதலாம். இவ்விடத்து விநயாகக் கடவுளை, வேலுடைக் குமரனாக, நாராயணனாக, சிவபெருமானாகக் காண்பதுடன், திருமகளாகக் கலைமகளாக உமையெனும் தேவியாகவும் காண்கின்றார். அத்துடன் விட்டாரா பாரதி! அல்லா, ஏஹாவோ என்னும் பிறசமயங்கள் கற்பித்துள்ள தெய்வ நாமங்களாலும் விநாயகரை அழைக்கிறார். ஈண்டு பாரதியாரின் கடவுட்கொள்கையை நம்மால் நன்கு உணரமுடிகிறது. அவரவர் எண்ணுகிற பெயரில், வடிவத்தில், வண்ணத்தில், நிறத்தில், தெய்வமென்ற மகாசக்தி உள்ளது என்பதனை உறுதிப்படுத்துகிறார். இவர் எடுத்துரைத்த நான்கு கடமைகளுக்குரிய பயன்பகளும் நான்காம். அவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாம். 'மணக்குள விநாயகனே' வான்மறைத் தலைவனே! இந்நான்கு கடமைகளையும் பயன்களையும், தன்னைத்தான் ஆளுகின்ற சமர்த்தனாகிய எனக்கு அருளவேண்டும்!' என்று விநாயகரின் அருள் நாடித் துதிக்கும் பாரதியாரின் பாடல்,

"கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர்நலம் வேண்டுதல்,
விநாயக தேவனாய், வேலுடைக் குமரனாய்,
நாரா யணனாய், நதிச்சடை முடியனாய்,
பிறநாட் டிருப்போர் பெயர்பல கூறி
அல்லா யெஹாவா எனத்தொழு தின்புறும்
தேவருந் தானாய், திருமகள், பாரதி

உமையெனுந் தேவிய ருகந்தவான் பொருளாய்

உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல் (*பா.எ.9*)

என்பதாகும்.

பாரதியின் பாட்டினைப் படித்தறியா ஏழைக்கிழவனும் கேட்பானாகில், அவன் துடித்தெழுந்து தன் மெலிந்த தோளைத் தட்டி, துளை மிகுந்த கந்தை ஆடையைச் சுருக்கிக்கட்டி எடுத்தெறியவேணும். இந்த அடிமை வாழ்வை - இப்பொழுதே - இக்கணமே என்று அடித்துரைத்து ஆவேசம் கொள்வானென்று கவிஞர் இராமலிங்கம் பிள்ளை உரைப்பதுதான் எத்தனை உண்மை! ஆம்! சிறுவரையும் தட்டி எழுப்பி 'அச்சமில்லை! அச்சமில்லை!' என்று சொல்லி, 'ஜயபேரிகை கொட்டடா' என்று ஆரவாரம் செய்தவரல்லவா அவர்! அதனால்தான் 'அஞ்சுதலும் இல்லை - அமுங்குதலும் இல்லை - பதுங்குதலும் இல்லை - பாவமும் இல்லை! நாங்கள் நடுங்க மாட்டோம்! நாண மாட்டோம்! எதுவந்தபோதும் இடர்ப்படோம்! அண்ட உலகமே சிதறித் தூளானாலும் அஞ்ச மாட்டோம்! கடல் பொங்கி எழுந்தாலும் கலங்க மாட்டோம்! யார்க்கும், எதற்கும், எங்கும், எப்பொழுதும் அஞ்சுதல் செய்யோம்! ஏனென்றால் வானமும், மழையும், ஞாயிறும், காற்றும், நல்ல நீரும், தீயும், மண்ணும், திங்களும், விண்மீன்களுமான இயற்கை எங்களுக்கென உள்ளது. அவற்றுடன் எங்களது உடலும் அறிவும் உளவே! மேலும் கணபதியின் பெயரும் நெஞ்சில் எப்பவும் நிலைத்துளதே! - என்றவாறு இறைபக்தர்களின் குதூகல உணர்ச்சியையும், நாமர்க்கும் குடியல்லோம் - நமனை அஞ்சோம் என்ற ஆன்ம வீரத்தையும் தமது வார்த்தைகளில் பொங்கிவரச் செய்து,

"அச்சமில்லை, அமுங்குத வில்லை

நடுங்குத லல்லை, நாணுத வில்லை

பாவ மில்லை, பதுங்குத வில்லை;

ஏது நேரினு மிடர்ப்பட மாட்டோம்;

கடல் பொங்கி எழுந்தாற் கலங்க மாட்டோம்;

யார்க்கு மஞ்சோம், எதற்கு மஞ்சோம்;

எங்கு மஞ்சோம், எப்பொழுது மஞ்சோம்" (*பா.எ.24*)

என்று பாடிய பாடலால் நம்மையும் ஆன்ம பலம் பெறச் செய்கிறார்.

கலியுகம் பற்றிய பழைய உணர்வைப் பாரதியார் நூதனமான வேகத்துடன் கவிதைகளில் கையாண்டுள்ளார். தமது காலத்திலிருந்த அடிமை, மிழமை, மடமை, வறுமை, கொடுமை முதலியவற்றின் சின்னமாகக் கலியை அமைத்தார். இந்தக் கலியை ஒழித்துக் கிருதயுகம் தோன்ற வேண்டும். அந்தப் பொய்க்கும் கலியை நானே கொல்வேன்.

பூலோகத்தார் கண்முன்னே மெய்யான கிருதயுகத்தினைக் கொணர்வேன். 'தெய்வவிதி இதுவே; இதற்கெனவே விநாயகரின்பால் விரதம்நான் கொண்டேன்' - என்ற தன் அசையாத நம்பிக்கையை வெளியிடுகிறார். இங்குக் கிருதயுகம் என்பதற்குள் பாரதி, தமது காலத்து லட்சியங்கள் யாவற்றையும் அடக்குகிறார். மண்ணுலகில் விண்ணுலகைக் காணல் வேண்டும் எனத்துடித்த மகாகவிக்குப் பழமைகள் யாவும் கலியாகவும், புதுமைகள் யாவும் கிருதமாகவும் உருமாறின. எனவேதான் அர்ச்சனை முறையில், 'விதியே வாழி! விநாயகா வாழி! பதியே வாழி! பரமா வாழி! வெற்றியும் - வீரமும் - பக்தியும் - உண்மையும் - ஊக்கமும் வாழி! இந்த வெற்றி, வீரம், பக்தி, உண்மை, ஊக்கம் போன்ற நல்ல குணங்கள் தாம் நம்மிடை நிலவும் அமர பதங்களாகும். பாரத மக்களே! காண்பீராக! கிருதயுதத்தினைக் கேடின்றி நிறுத்த விரதம் யான் கொண்டனன். வெற்றிதரும் விநாயகனின் தாளிணைகள் வாழிய வாழியவே! என்று பாரதியார் நவயுகத்தை நாவாரக் கூவி அழைக்கின்றார்.

"கிருத யுதத்தினைக் கேடின்றி நிறுத்த
விரதம்நான் கொண்டனன்; வெற்றி
தருஞ்சுடர் விநாயகன் தாளிணை வாழியே!" (பா.எ.40)

புதுவை மணக்குள விநாயகரைச் சமரச விநாயகராக சர்வமத விநாயகராக தேசிய விநாயகராக, ஆன்ம விடுதலைக்கே அன்றி அரசியல் விடுதலைக்கும் வரம் கொடுக்கும் விநாயகராகப் பாரதியார் படைத்திருக்கிறார். மனிதனை, மனித வாழ்வை முழு நிறையாகக் காண வரம் கேட்கும் பாரதியார், ஓர் அப்பழுக்கற்ற தெய்வபக்தர், தேசபக்தர்! புனிதமான மனிதர்! பயன்படு கவிஞர்! தத்துவ ஞானி!

வாழ்க பாரதி! வளர்க அவர் கவிதைப்புகழ்!

சங்கப் புலவர் ஔவையின் கட்டுடைப்பு

முனைவர் பு.இந்திராகாந்தி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
குந்தவைநாச்சியார்,
அரசினர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி)
தஞ்சாவூர்.

சங்கப் பாக்கள் புலவர்களின் புலமையில் விளைந்த வெறும் பாடல்களின் தொகுப்பு அல்ல. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியல் கூறுகளான அகத்தையும், புறத்தையும் அறிவதற்கு துணைநிற்பன. தலைவன், தலைவியரிடையே உண்டாகும் உள்ள உணர்வான பிறருக்கு அறிவிக்க இயலாத அன்புணர்வு அகமெனப்பட்டது. அனைவரும் அறியும் வகையில் கண்டு அறிந்து அனுபவித்து மகிழ்ந்து வாழும் வாழ்வு புறமெனப்பட்டது.

சங்க இலக்கியங்கள் தமிழ் மக்களின் வாழ்க்கை வரலாற்றை காட்டுகின்றன; அவை புராண இதிகாச இல்பொருள் வெற்றுப்புனைவுகள் அல்ல. அவை தமிழ்ச் சமுதாயத்தைக் காட்டும் படிமங்கள்.

வாழ்வியலை விளக்கும் இலக்கியங்கள் ஒருபுறம். அவ்விலக்கியங் களுக்கு இலக்கணம் என்பது மறுபுறம், நமக்குக் கிடைத்தள்ள இலக்கண நூல்களில் பழமையானது தொல்காப்பியம். இவ்விலக்கணநூல் அகப்பொருள் இலக்கணத்தைக் கூறிக்கொண்டு வருமிடத்து காதல் மேலீட்டால் காமம் தலை தூக்கும்போது பெண் இவ்வுணர்வை வெளிப்படுத்துதல் இல்லை என்கிறது.

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான" (தொல் நூள் 984)

எவ்வகை நிலமாயினும் பெண் மடல் ஏறுதல் இல்லை. ஆனால் ஆண் மகன் தான் விரும்பிய பெண்ணை அடைய மடலேறுதல் உண்டு என்பதை மேற்காணும் நூற்பா விளக்குகின்றது. பெண்களுக்கு மடல் ஏறுதல் இல்லை ஏன் தெரியுமா?

"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்

நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப" (தொல் நூல் - 1042)

அச்சம், நாணம், பேதமை இம்மூன்றும் முதன்மை பெற்று நிற்றல் பெண்களுக்கு இயல்பு ஆதலால் காதல் மேலீட்டு காமம் தலையெடுக்கும் போது அவ்வுணர்வை வெளிப்படுத்துதல் பெண்ணின் இயல்பு அல்ல என்கிறது.

உணர்வுகள் என்பது ஆணாயினும், பெண்ணாயினும் உலக உயிர்களுக்கு ஒன்றுதான். இதுதான் இயற்கையின் நியதி; தப்பான வழியில் வெளிப்படுத்துதல் வேண்டுமானால் தவறு என்று சுட்டலாம். நீ வெளிப்படுத்தவே கூடாது என்பது எவ்வகையில் சரியானது என்று ஔவை உணர்ந்தாரோ என்னவோ, தொல்காப்பிய இலக்கணவிதியை 2000 ஆண்டுகளுக்கு முன்பே கட்டுடைப்பு செய்த மாபெரும் பெண் புரட்சியாளராகத் திகழ்கிறார்.

"முட்டு வேன்கொல்? தாக்குவேன் கொல்?
ஒரேன் யானும்! ஓர் பெற்றி மேலிட்டு
ஆ அ! ஒல் எனக் கூவுவேன் கொல்
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவு நோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே"(குறுந்தொகை -28)

சுழன்று அசைந்து வீசுகின்ற தென்றல் காற்றானது என்னை வருத்துகின்றது. என் துன்பத்திற்குக் காரணமாகிய காமநோயினது கொடுமையை உணராமல் இவ்வூராரும் கவலையின்றி தூங்குகின்றனர். அவர்களுக்கு என் நிலைமையை அறிவிப்பதற்காக யான் முட்டுவேனா? தாக்குவேனா? ஏதோ ஒரு காரணத்தை மேலிட்டுக் கொண்டு 'ஆ' என்று 'ஒல்' என்றும் ஒலி எழுப்பிக் கூப்பிடுவேனா எதைச் செய்வது என்று அறியேன் என்று, கிழத்தி தோழிக்கு உரைத்ததாக அமைந்துள்ளது. இப்பாடல்,

தலைவியின் நுண்ணிய உணர்வினை மிக நுட்பமாக தலைவியே வெளிப்படுத்துவதாக பாடிய ஔவையின் புதுமையும், புரட்சியுமாகிய சிந்தனை தெளிவோடு கூடிய துணிவை என்னவென்று பாராட்டுவது, பெண் புலவர் வெள்ளி வீதியாரும் இதற்கு வலு சேர்ப்பது போன்று ஒரு பாடலைத் தந்துள்ளார். ஆனால் அது பாங்கனுக்கு தலைவன் கூறுவதாக அமைந்துள்ளது.

"இடிக்கும் கேளிர்! நும் குறை ஆக
நிறுக்கல் ஆற்றினோ நன்றுமன் தில்ல

ஞாயிறு காயும் வெவ்அறை மருங்கில்
கைஇல் ஊமன் கண்ணின் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய்! நோன்று கொளற்கு அரிதே!

(குறுந்தொகை 58)

ஞாயிறு காய்கின்ற பாறையில் கையில்லாதவன் அதே சமயம் வாயும் பேசமுடியாதவன், கண்ணால் காக்கும் வெண்ணெய் போல பரந்தன்று இக்காம நோய் என்று தலைவன் புலம்புவதாக அமைந்த போதும், புலவன் தான் உணர்ந்ததையும், அறிந்ததையும் பாட வல்லவன் என்ற வகையில் ஒரு பெண்ணின் உணர்வு ஆண் பாத்திரம் வழியாக வெளிப்படுத்தப்பட்டுள்ளதை உணரமுடிகின்றது.

பொய்யாமை

இரா.இராகவையங்கார்

இந்நாவலந் தீவிலுள்ள நம்பெரியோரெல்லாம் உலகிற் பெரும் பாவங்கள் ஐந்தாம் எனவும், அவை பொய் கொலை களவு கள் காமம் என்பனவாம் எனவும் உரைப்பர். "கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையும், உள்ளக் களவுமென் றுரவோர் துறந்தவை" என்றார் மணிமேகலையினும். இதன்கண் செய்யுணோக்கிக் 'கள்ளும் பொய்யும்' என எண்ணினாரேனும், பொய்முதலாக எண்ணுதலே வழக்காம் என்க. இவற்றுட் பொய்யொன்றே மற்றைக் கொலை முதலிய நான்கிலும் வியாபிக்கும் வலியுடையதாகலின், இதனையே தலையாய பாவம் என்பர். அது பொய்யுணர்வு, பொய்யுரை, பொய்யொழுக்கம் என மூன்றாக வைத்துக் கடியப்படும். இவ்வாறு பெரும்பாவங்கள் என்னும் வரிசையிற் பொய்முதலிய ஐந்தனையும் வைத்து, அவை எல்லாவற்றுள்ளும் பொய்யைத் தலைமையான பாவமாகக்கொண்டு அதனைத் திரிகரணத்தாலும் பற்றாமற் கடிந்தொழுகுவது நமக்குச் சிறந்த அறமாம். பிறநாட்டார், இப்பெரும்பாவங்களுட் பலவற்றைச் சிறுகுற்றமாகவுங் கருதார். பிறநாடுகள் பலவற்றிற் கொலையுங் கள்ளும் பாவவுணர்ச்சி யில்லாமலே பயிலப்படும். இனிப்பொய்யை நம்மவர் தலைமையான பாவமாகக் கருதியதற்குக் காரணம் என்னவெனிற் கூறுவேன்;- பொய்யுணர்வு காரணமாகவே கொலை முதலிய பாவங்களெல்லாம் பிறக்கும். மெய்யுணர்ந்தவழி அப்பாவங்கள் பிறவாவாம். கொலை முதலியன மனப்பரிசுத்தம் இல்லாதாராற் புரியப்படும். **மனப்பரிசுத்தம் சத்தியத்துடனிகழுமென்பர். "அகந்தூய்மை, வாய்மையாற் காணப்படும்"** என்பது திருக்குறள். கொலை கள் களவு காமம் நான்கும், மனவுணர்ச்சி நன்கமையாத மூடர்களாலும் விலங்குகளாலும் "இது கொலை, இது கள்ளுண்டல், இது களவு, இது காமம்" என்னும் பாவவுணர்ச்சியின்றி இயல்பாகவே செய்யப்படும். பொய்யோ விலங்குகளால் ஆகாமல், மானுடப்பிறவியினரால், தந்நெஞ்சால் நன்கு அறியப்பட்டு, இது பொய் என்னும் உணர்ச்சியோடே நிகழ்த்தப்படும். கொலை முதலிய நான்கும் பிறபொருள்கள் உண்டாயவழி உண்டாம்; பொய் பிறபொருளை வேண்டாமல் ஒருவன் தன்னானே எளிதினாக்கப்படும். ஒரு பொய்யைக்கூறிக் கொலை முதலியவற்றை இயற்றுவித்தல் கூடும்; கொலை முதலியன பெரும்பாலும் பிறவுடலையும் பொருளையும் அழிக்கும். பொய் பிறருணர்வைக்கெடுத்து, அவரைக் கொலை முதலிய பாதகங்கட்கு உள்ளாக்குவதற்கும் வாயிலாக நிகழும். கொலை முதலிய

நான்கும் ஒருவன் காயத்தின் வலியளவே செய்யப்படும். பொய் அவ்வாறளவுபடாமற் பரக்கும். கொலை முதலியன இப்பொய்யின் கண்ணே மறைந்துகொள்ளும்; பொய் இருண்டபெருங்காடு போல்வது. கொலை முதலியன அக்காட்டுத்திரிந்து இடரிழைக்கும் கொடிய விலங்குகள் போலும். கொலை முதலிய வினைகள், அவ்வவ்வினையுண்ட பொருள்கண்மட்டில் நிற்கும்; பொய்யை ஒருவன் கூறியொழிந்தால் அது பெருவிரைவிற் பரந்தோடி உலகை மூடிக்கொள்ளும். நரகம் என்னும் கொடிய அரக்கனது வலியகையிலுள்ள ஐந்து விரல்களாகும். இவ்வைந்து பாவங்களும், பொய் என்பது அவ்வைந்து விரல்களுள்ளும் அங்குஷ்டமாகும். கொலை முதலிய நான்கும் மற்றை விரல்களாம். எங்ஙனம் நான்குவிரல்களும் அங்குஷ்டத்தைத் தொட்டுக்கொண்டே ஒருவினை புரியப்படுமோ, அங்ஙனமே, கொலை முதலியன நான்கும் பொய்யைத் தொட்டுக் கொண்டே இயற்றப்படும். (அவ்வரக்கன் இவ்வைந்து பாவங்களாம் ஐந்து விரல்களாலும் தீய உயிர்த்தொகைகளைப் பற்றித் தன்எரி வயிற்றிட்டு வருத்துகிறான்) இவற்றாற் பொய்ப்பாவத்தின் தலைமையுணர்ந்து கொள்க. எல்லாத் தீயொழுக்கங்களும் பொய்யடியாகவே பிறப்பன என்னுங் கருத்துப்பற்றியே; ஞானபூரணரான ஸ்ரீசடகோபர், "பொய்ந்நின்ற ஞானமும் பொல்லா வொழுக்கும் அழுக்குடம்பும், இந்நின்ற நீர்மை இனியாம் உறாமை உயிரளிப்பான்" என முற்படப் பணித்தருளினார், 'மெய்யுணர்ந்தான் வீடு பெறும்' என்பதனால், மெய்யுணர்வு வீட்டிற்கு ஏது ஆகவும், பொய்யுணர்வு அதற்கு விரோதி யாகவும் அறியப்படுதலின், பொய்ப்பாவத்தலைமை எளிதிலுணரப்படும்.

இனித், திருவள்ளுவர் "ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன், பின்சாரப் பொய்யாமை நன்று" என்பதனால், தன்னோடு இணையொப்பதின்றித் தானேயாக நல்லது கொல்லாம யென்றும், பொய்யாமை அதன் பின்னே நிற்க நல்லது என்றும் உரைத்தமையின், கொலையினையே தலையாய பாவம் என்றலும், பொய்யை அதன் பின்னே வைத்துப் பாவம் என்றலும் அவர்க்குக் கருத்தாமெனத் துணியலாகும். அவர், பொய்யென்பது சிறிதுந் தீமைபயவாமல் நன்மையே பயக்கும்வழி மெய்போலவுங் கொள்ளப்படுதலால் திரியும் இயல்புடையதென்றும், கொலை அங்ஙனம் ஆகாது வேள்விமுதலாக யாண்டுச் செய்யப்படினும் ஒன்றனுயிர் நீத்தலாகிய இன்னாமையையே பயந்துவிடுதலால் திரியா இயல்புடையதென்றுங் கருதிப், பொய்க்கு முன்னே கொலையினை வைத்தனராவர். வேள்வியிற் செய்யப்படும் கொலைக்கும் பிராயச்சித்தம் இயற்றப்படுதலின் அது பாவமாதல் கண்டுகொள்க. அன்றியும், பொய் பாவமென்று கருதப்படுவது அதனால் விளையும் பலதீங்குகள் பற்றியேயாம். அத்தீங்குகளிலெல்லாம், 'சாதலின்

இன்னாத தில்லை' என்பதனாற் கொலையே தலையாய தீங்கு எண்ணலாகும். இத்தலையாய தீங்கு புரியாமல் ஒழுகுதலே தலையாய அறம் எனக்கொண்டாரெனினும் ஆம். அங்ஙனம் கொண்டாரேனும், அவர், "பொய்யாமை பொய்யாமை யாற்றி னறம்பிற, செய்யாமை செய்யாமை நன்று" என்பதனாற் பொய்யாமையையே இடைவிடாமற் செய்க எனவும், அங்ஙனம் செய்தாற் பிறவறமொன்றும் செய்யாமை ஒருதலையாக நன்றாம் எனவும் கூறியவாற்றாற், கொல்லாமை முதலாகிய எல்லாவறத்தின் பயனையும் இப்பொய்யாமையொன்றே தரவல்லதென்று அவர் கருதியுள்ளாரென்று தேறலாகும். பொய்யாமை எல்லாவறத்தின் பயனையும் தரவல்லதென்று கருதினார்க்கு, பொய் எல்லாப்பாவத்தின் பயனையும் தரவல்லதென்பதும் கருத்தாமென்பது எளிதிலுய்த்துணரப்படும். இதனால் அவரும் பொய்யே எல்லாத்தீங்குகட்குங் காரணமாமெனக் கருதினாராதல் காண்க. இஃதன்றி, 'யாமெய்யாக் கண்டவற்று ளில்லை யெனைத்தொன்றும், வாய்மையி னல்ல-பிற' என்பதனால், ""யாம் மெய்ந்நூல்களாகக் கண்ட நூல்களுள், யாதொரு தன்மையாலும் வாய்மையின் மிக்கனவாகச் சொல்லப்பட்ட பிற அறங்களில்லை' என்று இப்பொய்யாமையின் சிறப்புணர்த்தற்குத், தாமே முன்வந்து கரிகூறி நின்றதுங் காண்க. திருவள்ளுவர், பொய்யுணர்வு பொய்யுரை பொய்யொழுக்கம் இலராகிப் பொய்யாமையினைத் திரிகரணத்தானும் பேரறமாகக் கொண்டொழுகிய சிறப்பால் 'பொய்யில் புலவர்' எனப் பெயர் சிறந்தாராதலால் அவர் பொய்யாமைக்குக் கரிகூறி நின்றாராவர். இவற்றாற் பொய்யாமையின் மிக்கனவாகப் பிறவறங்களில்லையென்பதும் எல்லாப் பாவங்களையும் அப்பொய்யொன்றே தரவல்லதென்பதும் அவர்க்கும் உடன்பாடாதலுணர்க. சீத்தலைச்சாத்தனார் 'கள்ளும் பொய்யுங் காமமுங் கொலையுந், தள்ளா தாகுங் காமந் தம்பா, லாங்கது கடிந்தோ ரல்லவை கடிந்தோர்' (சிறைசெய்காதை) என்பதனால், இடம்பற்றிக் காமத்தையே தலையாய பாவமாகவைத்து, அதனைக்கடிந்தோரே மற்றை நான்கையுங் கடிந்தவராவர் எனவுரைத்தார். இக் கருத்தேகொண்டு 'காமமே கொலைகட் கெல்லாங் காரணம்' எனக் கூறினாருமுளர். இவ்வாறு ஒரோர் பாபபுண்ணியத்தை எடுத்துக் கூறுமிடத்து, முறையே விடுதற்கும் பற்றுதற்கும் ஏற்றபெற்றியால் மிக இழித்தும் மிகவுணர்த்துங் கூறுவது நூல்வழக்கேயாம். இங்ஙனம் காமம், கொலை முதலியவற்றிற்குப் பாதகத் தலைமை கூறும் ஆசிரியர்க்கெல்லாம் இத்தீங்குகள் மயக்க வுணர்வடியாகப் பிறப்பன என்பதும், அம்மயக்கவுணர்வு பொய்யுணர்வே யென்பதும் உடன்பாடாம். ஆதலாற் கொலை முதலிய தீங்குகளெல்லாம் பொய்யுணர்வைத் தள்ளா என்பது தெளிந்துகொள்க. இவையெல்லாம் நன்றாய்ந்த பெரியார் 'பொய்ந்நின்ற ஞானமும்

பொல்லா வொழுக்கமும்' எனப்பணித்தமையினையும் நோக்குக.

இப்பொய்யுரை சொற்குற்றம் நான்கனுட் டலையாயதெனப்படும்; சொற்குற்றம் நான்கு. இதனைப் "பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில், சொல்லெனச் சொல்லிற் றோன்றுவ நான்கும்" என மணிமேகலைக்கண் வருதலானுணர்க. குறளை, மெய்பற்றியதாயினும், அதனாற் பிறனுக்கு விளையுந் தீங்குபற்றியே பாவமெனவிலக்கப்பட்டது. தீமை பயப்பனவன்றி நன்மை பயவாதனவும் பாவமாம் என நம்பெரியோர் கருதியுள்ளா ரென்பதற்கு, அவர் வாக்கினாலாகும் பாவங்களுட் பயனில் சொல்லையும் ஒன்றாக எண்ணியதே சான்றாம். இதனால், அவர் தீமை பயக்கும் பொய்யுரையை எத்துணைப் பாதகமாக வைத்துக் கடிந்தாரென்பது தேறப்படும். இப்பொய்யுரையாமையின் மிக்க பேரறம் வேறில்லையென் பதனையும், எல்லா நல்லறங்களும் இப்பொய்யுரையாமை யொன்றுண்டாக வுண்டாம் என்பதனையும் நன்குணர்த்தற்கன்றே, நந்தெய்வப்பழமறையும் 'தர்மஞ்சர' என்பதற்கு முற்படவைத்து 'ஸத்யம்வத' என முழங்குவதூஉமாயிற்று என்க. சத்தியங்கூறுதலும் பிற்கூறப்பட்ட தருமத்தினொன்றாயிருப்பவும், அதனைத் தனியே பிரித்து முற்பட வைத்து ஓதியதே *அவ்வாய்மையின்றலைமை விளக்குமன்றே?*

இனி, நன்மையே பயவாது சிறிதுதீமை பயக்கும்வழியும் இப் பொய்யுரை பாவமாகுமெனவும், சிறிதுந் தீமைபயவாது நன்மையே பயக்கும் வழிப்புண்ணியமாகும் எனவும் கூறுதலுமுண்டு. பொய்க்கு *மறுதலையாகிய வாய்மையும் சிறிது* தீமை பயக்கும் வழியும் பாவமாம் என்பர். "வாய்மை யெனப்படுவ தியாதெனின் யாதொன்றுந், தீமையிலாத சொலல்" என்றார். இதனால் நம் பெரியார் கருத்தெல்லாம், எவ்வாற்றானும் உயிர்கட்குத் தீங்குபயவாமல் நன்மையே பயக்க வொழுகுதலையே நோக்கியன என்பது உணரத்தகும். இவற்றையெல்லாம் நோக்கின் தீமைபயப்பனவும் நன்மைபயவாதனவும் பாவமாமெனவும், தீமைபயவாதனவும் நன்மை பயப்பனவுமே புண்ணியமாமெனவும் நம்மவர் பகுத்துள்ளமை வெளியாம். "பிராணி பீடாநிவர்த்தியர்த்தமாகப் பொய்யுரைத்தலும் ஆம் என்பதுபற்றி, நன்மை வேண்டிக் கொலையும் ஆமோ எனின், நன்மையாவது ஜீவன்கட்குப் பீடை புகுதாமல் வர்த்தித்தலாதலின், கொலை, ஜீவன்கட்குப் பீடா நிமித்தமாதலின் ஆகாதென்று கொள்க."

பொய்யொழுக்கமாவது வஞ்சவொழுக்கம். அது, நூல்களிற் கூறப்பட்ட நன்னெறிகளில் உள்ளத்தால் ஒழுகானாகி, அவ்வந் நெறிகட்குரிய வேடங்களையும் ஆசாரங்களையும் உலகத்தை மோகித்தற் பொருட்டுப்புனைந்து நடித்தலாம். இது கூடாவொழுக்கினன் ஒருவன் மோனசந்நியாசிபோல ஒழுகுதல் முதலியனவாம். பொய், ஒழுக்கத்தினும்

உண்டெனபதனைப் "பொய்யாற் றொழுக்கம்", 'பொய்தீரொழுக்கம்', 'பொய்யடிமை' எனவருவனவற்றாலுணர்க. 'வேடநெறிநில்லார் வேடம்பூண் டென்பயன்' என்னுந் திருமந்திரமும் இப்பொய்யொழுக்கத் தினையே நிந்தித்ததாம். 'நெஞ்சிற் றுறவார் துறந்தார்போல் வஞ்சித்து, வாழ்வாரின் வன்கண்ணாரில்' எனவுரைத்தருளிய தெய்வப்புலவர் கருத்தால் நோக்கின், இவ்வஞ்சவொழுக்கத்தின் பெரும்பாதகத்தலைமை நன்கறியலாகும்.

இவ்வாறு, உள்ளம் உரை செயல் என்னும் மூன்றானும் பொய்த்த லில்லாமையையே நம்மவர் பொய்யாமை என்பர். சைன பௌத்தரும், இப்பொய்யாமையினை, முறையே பஞ்சமஹாவிரதத்துளொன்றாகவும் பஞ்சசீலத்துளொன்றாகவும் வைத்து இனிது போற்றுவர் எனவறிக. இவ்வாறு திரிகரணத்தானும் பொய்யாம் பெரும்பாவம் எய்தாமலொழுகுதலே ஒருவனுயிர்க்குச் சிறந்த பேரறமாம் என்பதற்குப் பொருந்த, நம் பெருநூல்களுட் கேட்கப்படும் இதிகாசங்கள் மிகப்பலவாம். அரிச்சந்திரன் என்னும் அரசர் பெருந்தகை ஒரு பொய் கூறமாட்டாமல், தன்னரசிழந்து மனையிழந்து மகனிழந்து, தானும் புலையற்கடியனாய்ப் புக்குப் படாதனபட்டதும்; தசரதன் என்னும் சக்கரவர்த்தி ஒரு பொய் கூறவறியாது, தன் அன்புடைத் திருமகனாரைக் காடுபோக்கித் தன்னாருயிர் துறந்ததும் நம்புண்ணிய சரிதங்களேயாம். நல்லோர்பாலன்றித், தன்னுயிரைப் போக்கவல்ல கொடியோர்பாலும் பொய்கூறலாகாதென்பதற்குத், தன்னைக் கொல்லப் புகுந்த கொடியபுலியிடத்தும் ஒருபொய் கூறவறியாதொழுகிய சுமதி கதை சேஷ தர்மத்துப் பிரசித்தி பெற்றதன்றோ. அறங்களுக்கெல்லாம் பெருநிலயமாகச் சிறந்த தருமனும், தன்கருத்தால் மெய்யேயாயினும் வேறோர் பொருள்படுதலால் துரோணருக்குத் தீங்கிழைப்பதொன்றைச் சொல்லியதனானே பொய்யனெனக் கொள்ளப்பட்டு, அப்பாதகத்தின் பயனாகக் கொடுநகரங்கண்டு நடுங்கினான் என்பது, நாம் பொய்யாமைக்கு எடுத்துக்காட்டும் மெய்ச்சரிதையாகும். இனித்தந் நெஞ்சறிவது பொய்யாமைக்கு, நக்கீரனார் ஓர் பேரிலக்கியமாவர். இவர் 'கொங்குதேர் வாழ்க்கை' என்னுஞ் செய்யுட்குத் தந்நெஞ்சறிந்த குற்றத்தைக் கூறியதும், அச்செய்யுளை அருளிச்செய்த இறையனார் இவர் முற்போந்து தம் நெற்றிக்கண்ணைக் காட்டித் தாந்தெய்வமாதலை இவர்க்குணர்த்திய காலத்தும் அவ்விறையனாரை நோக்கி, நக்கீரர், 'நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே' எனவுரைத்துத் தந்நெஞ்சறிந்ததைப் பொய்யாது நின்றதும் தமிழுலகம் நன்றறிந்தனவேயாம். வாய்மையினை முன்னிட்டுப் 'பொய்யில்புலவன்' 'பொய்யாமொழி' எனப் புலவர்க்கும், 'திருவாய்மொழி' 'பொய்யாமொழி' 'வாயுறைவாழ்த்து' என நூல்கட்குஞ் செய்யுட்கும் பெயர்வைத்தாளுதலும் நமக்குச் சிறந்ததாம். அறிவிலிக்கு

மகிழ்ச்சியே பயக்குமாயினும், அவன் செய்யாதனவற்றைக் கூறி அவனைப் பொய்யேபுகழ்தலை, நம்பெரியாரது செவ்வியநா ஒருபோதும் அறியா என்பர். இதனைச் 'செய்யா கூறிப்புகழ்த, லெய்யா தாகுமெஞ் சிறுசெந் நாவே' (புறம்) எனக் கல்விவீ றுடையார் கூறுதலான் அறிக. ஒருவற்கில்லா தனவற்றைக் கூறிப் புகழ்தலினும், அவனை வைதலையே இவர் நன்றென்று கொள்வர்; 'இல்ல புகழ்தலின் வைதலே நன்று' என்பது மேற்கோள். சிலபுல்லறிவோர், ஒருகால் ஔவையாரை எதிர்ப்பட்டுத் தம்மைப்பாடும்படி வேண்டியபோது, அவர் பால் ஒருகுண முங்காணாமையால் 'நும்மை யான் எங்ஙனம் பாடுவேன்' என்று அவர் மறுத்ததும் ஈண்டு நினைக்கத்தகும். இவ்வாறு பொய்யை விலக்கியும் பொய்யாமையைப் போற்றியும் நம்மவர் ஒழுகியதற்குப் பலபல மெய்க்கதைகள் எடுத்துக்காட்டலாகும். அவற்றையெல்லாம் இங்கு விரிப்பின் வரம்பின்றிப் பெருகுமென்க.

இனிப் பொய்யாமைக்கண் நம்மவர்க்குள்ள பெருமதிப்பை நன்கு தெளிதற்கு, எழுதாமறையினும் எழுதும் மறையினும் முறையே ஸத்யம், வாய்மை என்ற பெயர்களாற் பரம்பொருளை வழங்கியதே தக்க கருவியாகும். 'ஸத்யம் ஞானமநந்தம்' என்பதுவேதம். 'தூஉய்மை யென்ப தவாவின்மை மற்றது, வாஅய்மை வேண்ட வரும்' என்பது திருக்குறள். இவ்விடங்களில் ஸத்யம், வாய்மை யென்பன பரம்பொருளையே குறித்தன. இவ்வரிய பெரிய வழக்கம் நமக்கேயுரியது. எழுதாமறைக்கண் 'ஞானம்' என்ற சிறந்த பெயர்க்கும் முன்னாக 'ஸத்யம்' என்ற பெயரை வைத்தமையானே இதன்றலைமை ஆராயப்படும். இத்துணையும் கூறியவாற்றாற் பொய்யைப் பெரும்பாவங்களுட் டலையாகவைத்து, அதனைத் திரிகரணத்தானும் எய்தாமல் விலக்குவதூஉம், பொய்யாமை யாகிய வாய்மையே எல்லா அறங்களுள்ளுந் தலையாயதெனக்கொண்டு அதனையே தெய்வத்தின் திருப்பெயராகவைத்துப் போற்றுவதூஉம் நமக்கே அடிப்பட்டு வந்த வழக்கென்பது நன்கு தேறப்படும்.

நாவலர் இரா. நெடுஞ்செழியனின் திருக்குறள் [பகுத்தறிவு] உரைச்சிறப்பு

முனைவர் செ.ரவிசங்கர்

முன்னுரை

அற இலக்கியங்களில் திருக்குறள் முதன்மையானதாக அமைந்துள்ளது. திருவள்ளுவர் உலகத்துக்குப் பொதுவான கருத்துக்களை எழுதியுள்ளார். குறள் தமிழர்களுக்கான அற நூல் மட்டும் அன்று உலகத்துக்கும் உரிய அறநூல் ஆகும். பல காலங்கள் கடந்தும் இன்றும் குறள் நிலைத்து நிற்கின்றது எனில் அது தமிழர் பெற்ற செல்வத்துட் செல்வம் ஆகும். 'திருக்குறள் சாதி, மத, நிற வேறுபாடின்றி உலகெல்லாம் ஓதியுணரும் பொதுநூல், ஒப்புயர்வற்ற இலக்கிய மணி, கல்விக் களஞ்சியம், நீதிச்சுரங்கம், வெள்ளிப் பையிலிட்ட தங்கக் கனி, வள்ளுவன் புலவர்க்கரசன், உலகாசான் என்று மேனாட்டறிஞர் ஒருங்கே வியந்து போற்றுகின்றனர்' என்று சுத்தானந்த பாரதி குறிப்பிடுகிறார். அந்த அளவிற்குப் பெருமையும் சிறப்பும் பெற்ற திருக்குறளுக்குப் பல நூற்றாண்டுகளாகப் புதுப்புது உரைகள் வந்து கொண்டேயிருக்கின்றன. அதற்குக் காரணம் திருக்குறளை இன்னமும் முழுமையாக விளக்க முடியாததுதான். எனவேதான் அந்தந்தக் காலத்துக்குரிய அறிஞர்கள் தத்தமது அறிவுப் பார்வையைக் கொண்டு உரையெழுதிய வண்ணம் உள்ளனர். அந்த வகையில் நாவலர் இரா.நெடுஞ்செழியனார் தமது அறிவின் வெளிப்பாடாகத் திருக்குறளுக்கு உரையெழுதியுள்ளார். அவரது உரையை இக்கட்டுரை ஆராய்கின்றது.

வரலாறு

நெடுஞ்செழியன் 11.7.1920ல் பட்டுக்கோட்டை அருகே உள்ள திருக்கண்ணபுரத்தில் பிறந்தவர். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்தவர். 1944 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்தார். பின்னர் அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் கல்வித் துறை அமைச்சராக விளங்கியவர். தொடர்ந்து மிகப் பலமான அரசியல் வாதியாகத் தமிழ்நாட்டில் இருந்தவர். அத்துடன் தன்னை இலக்கிய வாதியாகவும் வெளிப்படுத்திக் கொண்டவர். மிகுந்த

செல்வாக்குடன் வாழ்ந்த இரா.நெடுஞ்செழியன் 12.1.2000 இல் அமரரானார்.

இலக்கிய நூல்கள்

நாவலர் பல நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் திருக்குறள் தெளிவுரை, பாவேந்தர் கவிதைகள் திறனாய்வு ஆகியவை குறிப்பிடத்தக்கன. மேலும், இங்கர்சால் நூலை மொழிப்பெயர்த்துள்ளார். மன்றம் என்னும் இலக்கிய இதழை நடத்தியது போன்ற பணிகளையும் செய்துள்ளார். இவரது நூல்கள் தமிழில் மிகவும் குறிப்பிடத்தக்க நூல்களாக விளங்குகின்றன.

உரை வண்ணம்

உரையாசிரியர்கள் தாம் உரையெழுதும் போது மூல நூலாசிரியரிடம் கற்பவர்களுக்கு நன்கு மதிப்பு ஏற்படுமாறும் ஈடுபாடு ஏற்படுமாறும் உரை செய்வதில் கருத்துடன் இருப்பர். தகுந்த தேர்ந்த சொல்லாட்சிகளைப் பயன்படுத்தி அவர்தம் உரைநடையைச் செழுமைப்படுத்துவர், பிற மொழிகளிலே காணலாகும் நல்ல குறிப்புகளை ஆங்காங்கே ஒப்பிட்டுக் காட்டுவர், பல்கலைப் புலமையையும் பன்னூற் பயிற்சியையும் நாம் உணர்ந்து கொள்கின்ற வகையில் பண்டை உரையாசிரியர்களின் உரை வண்ணம் அல்லது உரை இயல்பு இருக்கும்' என்பார் ந.சொக்கலிங்கம். மேற்கண்ட உரை இயல்புகளை இரா. நெடுஞ்செழியனாரின் உரையில் நன்கு காணலாம்.

பொதுவாகக் 'கற்றலின் கேட்டலே நன்று என்பது அக்காலத்தவர் கொள்கையாக இருந்தது. நூல்களுக்கு உரை எழுதாமல், வாயால் விளக்கிச் சொல்லும் வழக்கமும் செவியால் கேட்டு உணர்ந்து புலமை பெறும் வழக்கமும் அக்காலத்தில் நாடெங்கும் பரவி இருந்தது. ஆசிரியர் தம் மாணவர்களுக்கும், தந்தை தம் மக்களுக்கும் வாய்மொழியாகப் பழைய நூல்களுக்கு உரையும் விளக்கமும் கூறி வந்தனர். இவ்வழக்கம் வாழையடி வாழையாக வழி வழியாகத் தொடர்ந்து வந்தது. இதன் பயனாக ஒரு நூல் பல தலைமுறைகளைத் தாண்டி வரும் போது, ஒவ்வொரு தலைமுறைக்கும் உரிய கருத்துக்களையும், விளக்கங்களையும் சேர்த்துக் கொண்டு வளர்ந்து வந்தது. அதனடிப் படையில் இதுவரையில் திருக்குறளுக்கு வந்த உரைகள் எல்லாம் அவ்வவ் காலத்துக்குரிய கருத்துக்களை உள்ளடக்கிய உரைகளாக வரைந்துள்ளனர் எனலாம். அந்த வகையில் இரா. நெடுஞ்செழியனாரின் உரையில் புதுமையும் சமுதாயத்தின் தாக்கமும் வெளிப்படுகின்றதைக் காணலாம்.

நெடுஞ்செழியனாரின் உரை வண்ணம்

இவரது உரையில் பொழிப்புரை, கருத்துரை என்னும் இரண்டு கூறுகள் இடம்பெறுகின்றன. இவற்றைத் தவிர்த்து குறளை அடுத்து அதன் சீர் பிரித்து எளிமைப்படுத்திக் கொடுத்துள்ளார். மேலும் பொழிப்புரையில் நெடுஞ்செழியன் இலக்கணக் குறிப்பு கருத்து விளக்கம், மேற்கோள் முன்னைய உரையாசிரியர்களின் கருத்துக்களை மறுத்துரைத்தல் போன்றவற்றைக் கூறியுள்ளார். கருத்துரையில் குறளுக்குரிய கருத்தினைத் தெளிவாகப் புரிந்து கொள்ளும் வகையில் எளிமைப்படுத்திக் கொடுத்துள்ளார். இவை தவிர சொல் விளக்கம், ஆராய்ச்சித் திறம், மேற்கோளினைக் கையாளும் விதம், குறளுக்குள்ளே சரியான குறளைப் பொருத்திப் பார்த்தல், ஆசிரியர் என்னும் தன்மையில் தனித்த உரை கூறுதல், பகுத்தறிவுச் சிந்தனை, முன்னோர் உரையாசிரியர்களின் கருத்துக்கு உடன்படல், வினாவிடை அமைத்து உரை கூறுதல் போன்ற தன்மைகளையும் இவ்வுரையை ஏன் படைத்தார் அதன் நோக்கம் என்ன? என்பதனை 'இற்றைக் காலத் தமிழ்ப் பெருங்குடி மக்கள் எல்லோரும் திருக்குறளின் உண்மையான பொருள் விளக்கங்களைப் பகுத்து அறிந்து பார்க்கும் நெறியில் நின்று, படித்துப் புரிந்து கொண்டு அறிந்து கொண்டவைகளைத் தத்தம் வாழ்க்கையில் பயன்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்திலே தான் நான் இந்த உரை விளக்கப் படைப்பினைத் தர முன் வந்துள்ளேன்' என்று கூறி யுள்ளார். இக்கூற்று அவரின் உரையைப் பார்க்கும் போது தெளிவுபடுகிறது.

மேலும் உயர்ந்த பண்புகளை உலகியல் நடைமுறைக்கு ஏற்ற வகையிலும், இயற்கை அறிவியல் ஏற்பு முறைகளுக்கு ஒத்த தன்மையிலும் உணர வேண்டும். வள்ளுவர் வகுத்த அறநெறியின் உண்மைப்பொருளை 'உள்ளது உள்ளவாறு உலகியலுக்கு ஏற்ற முறையில் மக்களினம் உணர்ந்து செயல்பட வேண்டும் என்பது தான்' இந்தக் குறள் விளக்க உரையின் தலையாய நோக்கமாகும். என்றும் கூறியுள்ளார். அவரது நோக்கத்திற்கு ஏற்ற வகையில் இந்நூலில் பல குறள்களுக்கு உண்மையான உலகியல் நடைமுறைகளுக்கு ஏற்ற வகையில் உரை கண்டுள்ளார்.

புதிய உரை

திருக்குறளுக்கு உரையெழுதிய அனைவரும் புதிய சிந்தனையை மையமாகக் கொண்டு புதிய உரையைத் தந்துள்ளனர். அது அவரவர்

சார்ந்திருக்கின்ற சூழலைச் சார்ந்து அமைந்துள்ளது. அந்த வகையில் நெடுஞ்செழியனார் தமது உரையில் புதிய விளக்கத்தை உரையாகத் தந்துள்ளார்.

"துப்பர்க்குத் துப்புஆய துப்பு ஆக்கித் துப்பார்க்குத்
துப்பு ஆய தூஉம் மழை" (குறள் .12)

இக்குறளுக்குப் பொருள் கூற வந்த மணக்குடவர் முதல் பரிமேலழகர் வரை அனைவரும் உணவுப் பொருள்களை உண்பவர்களுக்கு வழங்கி தானும் உணவாக அமைவது மழை என்பதாகும் என்று கூறியுள்ளனர். ஆனால் புதுமையாக நெடுஞ்செழியன் 'உண்பவர்களுக்கு விரும்பும் உணவுப் பொருள்களை உற்பத்தியாக்கித் தருவதோடு, தன்னைப் பருகுபவர்களுக்குத் தானும் ஒரு உணவாக அமைவது மழையே ஆகும்' என்கின்றார். (ப. 17) இங்கு ஒரு மனிதன் விரும்பிச் சாப்பிடும் உணவினை என்று உரை தந்திருப்பது மற்ற உரையாசிரியர்களிடம் இருந்து புதுமையான கருத்தாக அமைந்துள்ளது. எல்லா வகையான உணவு விளைவதற்கு காரணமாக மழை இருந்தாலும் ஒருவன் விரும்பிய உணவு தான் அவனுக்குரியதாக அமையும், எனவே 'விரும்பும் உணவு' என்கின்ற பதம் உரையின் சிறப்பினைப் புதுமையாகக் காட்டுகிறது.

துறந்தார் சிறப்பு (நீத்தார் பெருமை) என்னும் அதிகாரத்தில் உள்ள அதிகாரத் தலைப்பு அதிகாரத்தின் இரண்டாவது குறளை வைத்துப் பெயரிடப்பட்டுள்ளது. மற்ற உரையாளர்கள் 'நீத்தார் பெருமை' என்று முதல் குறளில் உள்ள சொற்களைக் கொண்டு தலைப்பிட்டுள்ளனர். ஆனால் நெடுஞ்செழியனார்

"துறந்தார் பெருமை துணைக் கூறின் வையத்து
இறந்தாரை எண்ணிக் கொண்டு அற்று" (22)

என்பதில் உள்ள துறந்தார் பெருமையை 'துறந்தார் சிறப்பு' என அமைத்துத் தலைப்பிட்டுள்ளார்.

இவ்வதிகாரத்திற்கு உரை தரும் போது பழைய உரையாளர்களான மணக்குடவர், நீத்தார் பெருமையாவது துறந்த முனிவரது பெருமையைக் கூறல். இது கடவுளரை வணங்கினாற் போல் முனிவரையும் வணங்க வேண்டும் என்பதனாலும் அவையிற்றின் பின் கூறப்பட்டது என்று கருத்துரைக்கிறார்.

பரிமேல்: இன்னமும் கொஞ்சம் அதிகமாகச் சிந்தித்து 'அஃதாவது முற்றத் துறந்த முனிவரது பெருமை கூறுதல் என்கின்றார்' இவரைப்

பின்தொடர்ந்து அனைத்து உரையாசிரியர்களும் கூறியது கூறல் போல அதே கருத்தினை முன்வைக்கின்றனர். ஆனால் நெடுஞ்செழியனார் மிகத் தெளிவாக 'துறந்தார் சிறப்பு என்பது பொதுநல நோக்கத்தோடு இல்லற நலம் முழுவதையும் துறந்து, மனித சமூகத்தின் முன்னேற்றத்திற்கான நோன்புகள் பலவற்றையும் நோற்றுத் தன்னலம் துறந்து வாழ்தல் எனப்படும்' என்றுரைக்கிறார்.

இங்கு தன்னலம் துறத்தல் என்பது புதுமையான கருத்தாகும், இன்று துறவு மேற்கொண்டவர்களில் பலர் அதிகாரங்களைத் தன்னல நோக்கோடு கையில் வைத்துள்ளனர். ஆனால் யார்? தன்னைப் பற்றி எண்ணாமல் சமூகத்தின் நலனை முன்னிலைப்படுத்தி வாழ்கிறார்களோ, அவர்களே துறந்தவர் ஆவர் என்றுரைக்கிறார்.

இந்திரன் பற்றிய புதிய கருத்துரை

துறந்தார் சிறப்பு (நீத்தார் பெருமை) அதிகாரத்தில் இடம்பெற்றுள்ள

"ஐந்துஅவித்தான் ஆற்றல் அகல்விசும்புளோர் கோமான்
இந்திரனே சாலுங்கரி" 25

என்னும் குறளுக்கு பல உரையாளர்கள் உரை வகுக்கும் போது

மணக்: நுகர்ச்சி (புலன்களால் நுகரப்படுவனவாகிய சுவை முதலிய ஐந்துமாம்) யாகிய ஐந்தினையும் துறந்தானது வலிக்கு அகன்ற விசும்பில் உள்ளார்க்கு நாயகனாகிய இந்திரனே அமையும் சான்று.

பரிதி: பொறிவாயிலே புலன் செல்லாமல் தன்வழி மனசு இருப்பானுக்கு (மனத்தை; தன்வயமாக்கி நடத்துவானுக்கு) இந்திரனே சாட்சி.

பரிமேல்: புலன்களில் செல்கின்ற அவா ஐந்தினையும் அடக்கினானது வலிக்கு, அகன்ற வானத்துள்ளார் இறைவனாகிய இந்திரனே அமையும் சான்று.

என்று இக்கருத்துக்களைத் தான் தொடர்ந்து எழுதி வருகின்றனர். இது பற்றி யாரும் எந்தக் கேள்வியையும் முன் வைக்கவில்லை ஆனால் நெடுஞ்செழியனார் தமது உரையில்

'வடமொழியாளரின் கற்பனைப் புராணக் கதைப்படி ஐம்புலன்கள்ளயும் அடக்கமாட்டாமல், அகலிகையைப் புணர்ந்து, கௌதம முனிவரால் சாபமிடப்பட்டு, அருவருப்பான தோற்றத்தைப் பெற்று, உலாவிய இழிமகனான இந்திரனை, இக்குறளோடுப் பொருத்திப்

பொருள் கூறுவது எந்த வகையிலும் பொருந்தி வராது, ஐம்புலன் களையும் அடக்கிய ஆற்றல் மிகுந்த ஒருவரின் வலிமைக்கு அந்த இந்திரனை உவமையாகக் கொண்டு வள்ளுவப் பெருந்தகையார் கூறுவார் என்று எண்ணுவதற்கே இடமில்லை' (ப.25) என்று கூறுகிறார் எனவே தமது உரையில் 'இந்திரன்' என்னும் சொல் 'இந்திறன்' என்று கொள்ள வேண்டும் என்று கூறி இந்திறன் என்பது பாட வேறுபாடாக ஓலைகளில் இருந்து சிதைந்து போய் விட்டது எனவே இந்திறன் என்பது இனிய திறமை மிக்க அறிவன், என்று பொருள் கொள்ள வேண்டும் என்கிறார்.

இவரது கருத்துரையில் 'ஐம்புலன்களால் ஏற்படும் அவாக்களை அடக்கக்கூடிய வல்லமைக்கு பரந்த வான்புகழ் கொண்டோரில் உயர்ந்தவராக விளங்கும் இனிய அறிவாற்றலில் சிறந்த சான்றோரே சான்று ஆவார்' என்று கூறியுள்ளார். இவர் தான் முதன்முதலில் இச்சிந்தனையைப் புதிதாக உரையில் முன்வைக்கிறார்.

ஆனால் தண்டபாணிதேசிகர் இந்திரன் குறித்த கேள்வியை தமது உரைக்களஞ்சியத்தில் மேலோட்டமாகவே முன்வைக்கிறார். 'வள்ளுவர் கால இந்திரன் யார்? வரலாறு யாது? இந்திரன் தமிழர் தெய்வமாக இருந்து வேதத்தில் இடம்பெற்றவனா?' (திருக்குறள் உரைக்களஞ்சியம் ப.159) என்பது ஆய்விற்குரியது என்னும் சிந்தனையை முன்வைக்கிறார். ஆனால் நெடுஞ்செழியன் தமது உரையில் இதனைத் தெளிவு படுத்தியுள்ளார்.

" செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது" (101)

செய்நன்றியறிதல் அதிகாரத்தில் அமைந்துள்ள குறளுக்கு புதிய நடைமுறையில் உள்ள தொடர்களைக் கொண்டு உரை வரைந்துள்ளார்.

'விளம்பரத்தை விரும்பாமல், ஆரவாரமில்லாமல், பிறன் ஒருவனின் குறிப்பறிந்து, ஒருவர் அவ்வப்போது உதவி செய்து வருவது என்பது ஈடுசெய்ய முடியாத ஒரு பேருதவியாகும்'. என்று குறளுக்கான பொருளை உரையாகத் தந்துள்ளார்.

"மறப்பினும் ஓத்து கொளலாகும் பார்ப்பான்
பிறப்பு ஒழுக்கம் குன்றக் கெடும்" 134

இக்குறளுக்கு உரை கண்டவர்கள் 'பார்ப்பான்' என்னும் சொல்லுக்கு பிராமணன் (மணக்) அந்தணன் (பரிமேல்) அந்தணன் (பழையஉ) என்று பொருள் கொள்கின்றனர். பின்னால் வந்தவர்களும் அதே பொருள்

கொண்டு உரை கண்டுள்ளனர். ஆனால் நெடுஞ்செழியன் புதிய பார்வையில் 'பண்டைநாளில் பார்ப்பான் என்றால், நூல்களைப் பார்ப்பவன், நாழிகை; கணக்கைப் பார்ப்பவன், காலக்கணக்குப் பார்ப்பவன், பருவ நிலையைப் பார்ப்பவன், நிமித்திகம் பார்ப்பவன் என்று பொருள், ஒரு வகுப்பினரைக் குறிக்காது' என்று விளக்கமானப் பொருளைத் தந்துள்ளார். இங்கு மற்ற உரையில் இருந்து வேறுபட்டு புதிய உரையைத் தந்துள்ளார்.

பொதுவாகத் திருக்குறளுக்கு உரையெழுதிய அத்தனைபேரும் புதிய சிந்தனைகளைத் தமது உரையில் எழுதுவது இயல்பே அந்த வகையில் நெடுஞ்செழியன் தமது காலத்திற்குப் பொருந்தி வருகின்ற கருத்துக்களைக் கொண்டு புதிய உரையைத் தந்துள்ளார். அவரது புதிய உரை உலகியல் சார்ந்து அமைவதாக உள்ளது. இந்த உலக வாழ்க்கை நிலையில்லாதது என்பதை குறள் 334க்கு உரையெழுதும் போது உயிரோடு கூடி வாழும் வாழ்வை ஒவ்வொரு நாளும் குறைப்பதால் அந்த நாள் உடம்பை அறுக்கும் வாள் எனப்பட்டது. உடம்பின் இளமை குறையும் என்ற நிலையாமை இதனால் உணர்த்தப்பட்டது. என்று நிலையாமையைக் கூறி உரையில் புதிய சிந்தனையை வெளிப்படுத்துகிறார்.

தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள்

முனைவர் பா.நேருஜி
உதவிப்பேராசிரியர்,
உயராய்வு மையம், செந்தமிழ்க் கலை கல்லூரி,
மதுரை-1.

'பண்பாடு' என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையதாகும். மனிதனைப் பிற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்திக் காட்டுவதும் மனித இனத்தை அடையாளப்படுத்தும் காரணியாகத் திகழ்வதும் இப்பண்பாடே ஆகும். மனிதனால் பின்பற்றப்படும் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், தொழில், பயன்படுத்தப்படும் புழங்குபொருட்கள், சட்டங்கள், கலைகள் போன்றவற்றின் வாயிலாக இப்பண்பாடு வெளிப்படுகிறது. இவற்றில் மக்களால் அன்றாடம் பயன்படுத்தப்படும் புழங்கு பொருட்கள் மக்களின் பண்பாட்டினைப் பிரதிபலிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. மக்களின் இன வரலாற்றினை ஆராயும் வரலாற்றாளர்கள் பழங்கால மக்கள் பயன்படுத்திய புழங்கு பொருட்களை அடிப்படையாகக் கொண்டே மக்களது வரலாற்றை விளக்கியும் வகைப்படுத்தியும் காட்டியுள்ளனர். இதனடிப்படையிலேயே பழங்கற்காலம், புதிய கற்காலம், பெருங்கற் புதைவுக்காலம், செம்புக்காலம், வெண்கலக் காலம், இரும்புக் காலம் என புழங்குபொருட்களின் வழி காலப் பகுப்பினை வரையறை செய்து காட்டியுள்ளனர். இவ்ஆய்வுக் கட்டுரையில் தமிழர் பண்பாட்டில் புழங்குபொருட்கள் பெறும் முக்கிய இடம் பற்றி விளக்கியுரைக்கப் பட்டுள்ளது.

புழங்கு பொருட்கள்

புழங்குபொருள் என்பது மனிதனின் தேவைக்காக மனிதனால் உருவாக்கப்பட்டு பயன்படுத்தப்படும் அல்லது உபயோகப்படுத்தப்படும் பொருட்களைக் குறிப்பதாகும். இயற்கை வளங்களைப் பண்பாட்டுப் படைப்புகளாகவும் கலைப் படைப்புகளாகவும் மாற்றிக்கொள்வதைப் புழங்குபொருள் சார் பண்பாடு என்று குறிப்பிடுவர். புழங்குபொருட்களும் பண்பாடும் நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவையாகும். மக்கள் குழுவென்று சில தனித்த அடையாளங்களோடு வாழ்ந்துள்ளது என்பதனை அறியப் புழங்குபொருட்கள் சிறந்த சான்றாக உள்ளன. இதனால் பண்பாட்டைக்காட்டும் கண்ணாடியாகப் புழங்குபொருட்கள் விளங்கிவருகின்றன.

அருங்காட்சியகங்களில் மக்கள் வேவ்வேறு காலகட்டங்களில் பயன்படுத்திய புழங்குபொருட்கள் முறையாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அப்புழங்குபொருட்கள் அவ்வக்காலத்திய மக்களின் பண்பாட்டை, வாழவியல் முறைகளை அறிந்து கொள்ளவும் பண்பாட்டு மீட்டுருவாக்கம் செய்யவும் பயன்படுவதாய் அமைகின்றன. இதனால் பண்பாட்டைப் பொருட்கள் பிரதிபலிக்கின்றனவா? அல்லது பொருட்கள் பண்பாட்டைப் பிரதிபலிக்கின்றனவா? என்று வேறுபாடு அறியமுடியாத நிலையில் ஒன்றையொன்று உறவுடையதாகக் காணப்படுகின்றன.

புழங்குபொருள் பண்பாட்டை அறிஞர்கள் கலை என்றும் கைவினை என்றும் இருவகையாகப் பகுக்கின்றனர். கைவினைப் பொருட்களை அன்றாட வாழ்க்கை சார்ந்த, சமூக பொருளாதாரச் செயல்பாடுகளுக்கு நேரடியாக உதவக்கூடிய பொருட்கள் என்றும் அழகியல் சார்ந்த, மகிழ்ச்சி தருகிற, அலங்காரத் தன்மை கொண்டவற்றைக் கலை சார்ந்த பொருட்கள் என்றும் குறிப்பிடுகின்றனர்.

புழங்குபொருட்களின் வகைப்பாடு

மக்கள் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திய மற்றும் பயன்படுத்திக் கொண்டிருக்கும் புழங்குபொருட்கள் மூலப் பொருள்களின் அடிப்படையில் பலவாறு வகைப்படுத்தப்படுகின்றன. அவை: மட்பாண்டப் புழங்குபொருட்கள், மரத்தாலான புழங்கு பொருட்கள், முடைதல் தொழில் புழங்குபொருட்கள், உலோகத்தாலான புழங்குபொருட்கள், ஆடைகள், அணிகலன்கள் என்பனவாகும். இப்புழங்குபொருட்கள் தமிழர் பண்பாட்டில் எத்தகையப் பங்கை வகிக்கின்றன என்பதனைப் புரிந்துகொள்ள வழிவகுக்கும் என்பதால் அவை இங்கு விளக்கியுரைக்கப்படுகின்றன.

தொடர்ச்சி அடுத்த இதழில்

இதழ்க்கட்டணம்	**உள்நாடு**	**வெளிநாடு**
ஆண்டுக்கட்டணம்	ரூ. 200	ரூ. 1,000
ஆயுள்கட்டணம்	ரூ. 2,000	ரூ. 10,000
புரவலர் கட்டணம்	ரூ. 10,000	ரூ. 20,000
தனி இதழ்க்கட்டணம்	ரூ. 10	

ஆனந்தம் எங்கே?

டாக்டர் பெ.போத்தி

(பஃறொடை வெண்பா)

ஆனந்தம் நோக்கி அலைந்து திரிகின்றோம்
ஆனந்தம் எங்குமில்லை ஆழ்மனதில் உள்ளது
துன்பத்தை எண்ணித் துயர்மிகக் கொள்ளாது
துன்பத்தைச் சந்தித்தால் தூரமாய் ஓடிடும்
ஆசை துரத்திடின் ஆனந்தம் தேடிவரும்
ஆசையே துன்பத்தின் ஆரம்ப மென்றறிவோம்!
உச்ச எதிர்பார்ப்பு உண்டாக்கும் ஏமாற்றம்
நிச்சயமாய் ஏற்படுத்தும் நிம்மதி இன்மையை!
கிட்டியதை இன்பமாக்கி கிட்டா தவைமறந்து
மட்டாய் மனமிருந்தால் மட்டிலா இன்பமூட்டும்
பட்டினியைக் கண்டிடுவோம்! பேராசை போக்கிடுவோம்!
ஈட்டியதில் ஈந்திடுவோம்! இச்சை குறைத்திடுவோம்!
நாவினைக் காத்திடுவோம்! நேயம் வளர்த்திடுவோம்!
தேவை குறைத்திடின் தன்னாலே துன்பம்போல்!
இல்லாரைக் காத்திடுவோம்! என்றும் பிணிஒழிப்போம்!
நல்ல இறையுணர்வை நாளெல்லாம் போற்றுவோம்!
வந்ததை ஏற்று வரும்துயர் தடுத்திட்டு
சிந்தை மகிழ்வோம் சிறந்து!

சங்கம் மற்றும் கல்லூரிச் செய்திகள்

20.02.2016ஆம் நாளன்று சங்க வளாகத்தில் தாய்மொழி நாள் சிறப்புச் சொற்பொழிவு நடைபெற்றது. முதுமுனைவர் இரா.இளங்குமரனார் அவர்கள் தாய்மொழி என்ற தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்நிகழ்வில் தமிழகத் தமிழ்ச்சங்கக் கூட்டமைப்பினர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

23.02.2016ஆம் நாளன்று வள்ளல் பொன்.பாண்டித்துரைத்தேவர் ஆய்வுக் கருத்தரங்கம் நடைபெற்றது. முனைவர் கோ.சுப்புலெட்சுமி உதவிப் பேராசிரியர் தலைமை தாங்கினார். முதுகலை இரண்டாமாண்டு மாணவர் செ.முனீஸ்வரன், முதுகலை முதலாமாண்டு மாணவி கு.ஜஸ்வர்யா ராணி ஆகியோர் ஆய்வுக் கட்டுரை வழங்கினார்கள்.

25.02.2016ஆம் நாள் தமிழ்நாடு காந்தி நினைவுநிதி காந்தியச் சிந்தனைக் கல்லூரி, செந்தமிழ்க் கல்லூரி, மதுரை நான்காம் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய திறனாய்வு நிகழ்ச்சி நடைபெற்றது. தமிழ்நாடு சர்வோதய மண்டல், தமிழ்நாடு காந்தி நினைவுநிதி தலைவர் திரு.க.மு.நடராஜன் தலைமை தாங்கினார். நான்காம் தமிழ்ச்சங்கச் செயலாளர் திரு.ச.மாரியப்பமுரளி அவர்கள் முன்னிலை வகித்தார். பதினோராம் திருமுறை நூலை மதுரை எம்.ஏ.வி.எம்.எம். கல்லூரி முதல்வர் முனைவர் மு.அருணகிரி அவர்கள் திறனாய்வு செய்தார். பாரதியாரின் பாஞ்சாலி சபதம் நூலை மதுரை யாதவர் கல்லூரியின் மேனாள் தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் இ.கி.இராமசாமி அவர்கள் திறனாய்வு செய்தார். பேரா.மேஜர் பொ.சந்திரசேகர் அவர்கள் கருத்துரை வழங்கினார். காந்தியச் சிந்தனைக் கல்லூரி முதல்வர் முனைவர் சு.முத்துஇலக்குமி, நூலாசிரியர் அவர்கள் உரைநிகழ்த்தினார்.

ஏப்ரல் திங்கள் நினைவுக்குரிய தமிழ்ச்சான்றோர்கள்

பாரதிதாசன்
(ஏப்ரல்.21)

வ.சுப.மாணிக்கம்
(ஏப்ரல்.25)

சாலினி இளந்திரையன்
(ஏப்.28)

உ.வே.சா
(ஏப்..28)

பதிப்பாசிரியர்: **பேரா. இரா.சதாசிவம்**

ஆசிரியர் குழு

பெரும்புலவர் திரு. **இரா.இளங்குமரன்**

முனைவர் திரு. **அ.அ.மணவாளன்**
முனைவர் திரு. **முருகரத்தனம்**
முனைவர் திரு. **இராமசுந்தரம்**
முனைவர் திரு. **கு.வெ.பாலசுப்பிரமணியன்**
முனைவர் திரு. **ம.திருமலை**
முனைவர் திரு. **மு.மணிவேல்**
முனைவர் திரு. **இ.மறைமலை**
முனைவர் திரு. **ம.பெ.சீனிவாசன்**
முனைவர் திரு. **பெ.சுயம்பு**
முனைவர் திரு. **இ.கி.ராமசாமி**
முனைவர் திரு. **செ.கந்தசாமி.**
முனைவர் திரு **உ.கருப்பத்தேவன்**

RNI Regd. No.5508/56 December 2014 MA/130/2014-2016
Posted at Madurai BPC on 25th of every month

செந்தமிழ் கல்லூரி

மதுரைத் தமிழ்ச் சங்கம்

(தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் 8+ தேசியத்தரம் பெற்றது)
மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 625 001 ✆ 0452 - 2343707, நிகரி: 0452 - 4373475

- ♦ இளம் இலக்கியம்
- ♦ இளங்கலை
- ♦ முதுகலை
- ♦ இளம்நிலை ஆய்வாளர்
- ♦ முதுநிலை ஆய்வாளர்
- ♦ பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

சிறப்பு அம்சங்கள்

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன

முனைவர் சு.விஜயன்
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இராணி ந.இலட்சுமி குமரன் சேதுபதி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி

அனுப்புநர்,
செயலாளர்
மதுரைத் தமிழ்ச் சங்கம்,
54, தமிழ்ச் சங்கம் சாலை,
மதுரை - 625 001.

From
THE SECRETARY
Madurai Tamilsangam
54, Tamil Sangam Road,
Madurai - 625 001, TAMILNADU, INDIA

பெறுநர்/To,

Book Post

வெளியிடுபவர்: **ச.மாரியப்பமுரளி** M.A.,B.L.,செயலாளர்
54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை - 1 ✆ 0452 - 2343707
பதிப்பாசிரியர்: **இரா.சதாசிவம்**, 2/861, இராசராசன் தெரு, மதுரை - 20, அலைபேசி:94874 45403
அச்சகம்: **ஜெயஸ்ரீ கிராபிக்ஸ்**, காமராஜர்சாலை, மதுரை-625 009.